Registered No. M. 5068

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ வைகாசிமீ 11௨ 24—5—1948 ஹிஜ்ரி 1367 ரஜப்மீ 14௨ திங்கட்கிழமை. } இதழ் 18

சென்ற வாரத் தொடர்ச்சி

ஜமீயத் கூட்டத்தில்
மௌலானா மதனியின் அறிவுரை.

———o———

கடத்தப்பட்ட பெண்கள்

பரிவர்த்தனை பாதகத்தின் விளைவுகளில் சக்தியற்ற சகோதரிகள், குமாரிகள் கடத்திச் செல்லப்பட்டதே எல்லாவற்றையும்விட வெறுக்கத் தகுந்த அம்சமாகும். அபலைகளை மிருக இச்சைக்கு இலக்காக்கி கற்பு நிலையை அழித்து இந்தியாவின் நற்பெயருக்கு எல்லையற்ற களங்கம் உண்டுபண்ணியாயிற்று. இரண்டு டொமினியன்களிலும் அமைதி ஏற்பட்டு வரும் இச்சமயத்திலும் ஏராளமான அபலைகள் காட்டுமிராண்டிகளின் அக்ரமத்துக்கு இலக்காகவே இருந்து வருகின்றனர். தீங்கிழைக்கப்பட்ட பெண்களை இவ்வித சாபக்கேட்டிலிருந்து மீட்பது மனிதவர்க்கத்துக்கு செய்யப்படும் மிகப்பெரிய தொண்டாகும்.

அவர்களுடைய உடைந்த உள்ளங்களிலிருந்து எழும்பும் மௌனக் கூக்குரல் இந்தியா பாகிஸ்தான் சர்க்கார்களின் பொறுப்பு வாய்ந்தவர்களின் காதுக்கு எட்டியிருப்பது திருப்தியளிக்கின்றது. இரண்டு டொமினியன்களும் மீட்கும் வேலையிலிறங்கியிருக்கின்றன ஆயினும் ஜனங்களிடையே குறிப்பிடத்தக்க மனமாறுதல் ஏற்படாமலிருப்பதைக் குறித்து வருந்த வேண்டியிருக்கிறது. தீங்கிழைக்கப்பட்ட பெண்களுக்கு விமோசனம் அளிக்க விரும்பும் ஹிந்து முஸ்லிம்கள் சர்க்காருடன் பூரணமாக ஒத்துழைக்க முன்வரவேண்டும். அதனால் ஏழைப்பெண்மணிகளின் நரகவாழ்க்கை ஒரேநாளில் ஸ்வர்க்கமாக மாறமுடியும் ஆயிரக்கணக்கான தாய்மார்கள் தங்களுடைய சிசுக்களையும், சகோதரிகள் குமாரிகள் தங்களுடைய சகோதரர் தாய் தந்தையரையும் மீண்டும் ஆலிங்கனம் செய்துகொள்வது சாத்தியமாகும்.

முஸ்லிம்களின் கடமை

அக்ரமத்தையும் அநியாயத்தையும் எதிர்த்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிப்பது இஸ்லாமின் முக்கிய அம்சம். அந்த லட்சியத்துக்காக உழைப்பது முஸ்லிம்களின் கடமை. கடத்திச் செல்லப்பட்ட பெண்கள் யுத்தக் கைதிகளல்ல. கொலை, கொள்ளி, கொள்ளை போன்ற செய்கைகளை இஸ்லாமிய புனித யுத்தம் என்று சொல்லுவது இஸ்லாமை கேவலப்படுத்தி அதன் உயரிய போதனைகளைக் கேலி செய்வதாகும்.

சொந்த இச்சைகளுக்கு இஸ்லாமிய போர்வையிட்டு மூட முயற்சிப்பதும், தான்தோன்றித்தனத்தை இஸ்லாம் என்று சொல்லுவதும் இஸ்லாமுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் செய்யப்படும் பகிரங்க துரோகமாகும். பாமர ஏழை முஸ்லிம்கள் இதுவரை பாகிஸ்தான் கிளர்ச்சியை இஸ்லாமிய கிளர்ச்சி யென்றே நினைத்து வந்தனர். அதன் விபரீத விளைவுகளை இன்று பார்த்தாய்விட்டது.

மகாத்மா காந்திஜீயின் கொலை

ரத்தவெறிப் படலம் பூராவிலும் காந்திஜீ கொல்லப்பட்டதுதான் மிகவும் வெட்கப்படத்தகுந்த திடுக்கிடத்தக்க சம்பவம். காந்திஜீ ஒழுக்க சீலர்; மனித வர்க்கத்தின் நண்பர்; தேசத்தின் உண்மையான ஊழியர்; மானிட சேவையிலேயே தன்னுடைய அறிவு ஆற்றல் முழுவதையும் செலவழித்தார். நாட்டு விடுதலைக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் விமோசனத்துக்கும் தன்னை அர்ப்பணித்திருந்தார். ஆகஸ்ட் 16 அதாவது லீக் நேரடிவடிக்கைக்குப் பிறகு ஆத்திரமூட்டித் தூண்டிவிட்டுப் பாமர மக்களை காட்டுமிராண்டித்தனத்தில் இறக்கிய பிற்போக்கு சக்திகள் மூட்டிவிட்ட கலகத்தீயை அணைக்க காந்திஜீ பிரமிக்கத் தகுந்த முறையில் உழைத்தார்.

நவகாளியில் அறுந்த உறவை மீண்டும் பலப்படுத்தினர். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய பச்சாதாபப்பட்டு முன்வரும்படி அக்ரமம் செய்தவர்களைத் தூண்டினர். தன்னம்பிக்கையை ஊட்டி பாதிக்கப்படவர்களை பலப்படுத்தினர்.

நவகாளிக்குப் பிறகு பீஹாருக்கு விஜயம் செய்தார். நவகாளியில் பாதிக்கப்பட்ட ஹிந்துக்களுக்குச் செய்த அதே உதவியை பீஹாரில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும் செய்தார். பிறகு சமாதான தூதரான காந்திஜீ கல்கத்தாவுக்குப் பயணமானர். ஒரு வருஷமாய் கல்கத்தாவுக்கு பிடித்திருந்த பைத்தியம் காந்திஜீயின் முறையால் சில தினங்களுக்குள்ளேயே நீங்கி விட்டது. வேற்றுமை, துவேஷம் அகன்று அன்பு நிலவ ஆரம்பித்தது. கல்கத்தாவுக்குப் பிறகு டில்லியடைந்தார். நேர்மை, தன்னலமற்ற சேவையால் தீங்கிழைக்கப்பட்டவர்களின் ஆதரவாளராக விளங்கினர்.

வகுப்புவாதம் அபாயகரமானதொரு தொத்து நோய் என்பது காந்திஜீக்குத் தெரியும் அது நீக்கப்படாவிடில் நாட்டை மேலும் பல கூறுகளாய் பிரித்துவிடக்கூடுமென்றும் அகனல் அருமை நாடு மீண்டும் சாம்ராஜ்ய சக்திகளுக்கு பணிய வேண்டியிருக்கும் என்றும் காந்திஜி அஞ்சினர். எனவே தள்ளாத வயதிலும் உறுதியுடன் வகுப்புவாத சாபக்கேட்டை எதிர்த்து நின்றார். முடிவில் தேசத்தின் பெருஞ்செல்வமான ஆத்மாவையும் தேசத்திற்காகவே அர்ப்பணித்துவிட்டார்.

கிட்டத்தட்ட மூன்று மாதங்களாக நம்முடைய உண்மையான நண்பர், உலகத்தின் மிகப் பெரிய மனிதரான மகாத்மாஜீயின் அன்பு, ஆதரவு தலைமையை நாம் இழந்துவிட்டோம் என்பது உண்மையே. ஆயினும் காந்திஜீயின் ஆத்மீகத் தியாகம் வீண்போகவில்லை. ஹிந்து முஸ்லிம்கள் பரஸ்பர வேற்றுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஐக்கிய சமுதாயத்தை உருவாக்கி உயிரைப்பணயம் வைத்தாகிலும் நாட்டை முன்னேற்ற முன்வரும்படியே காந்திஜீயின் தியாகம் நம்மிடம் கோருகின்றது. காந்திஜீயின் கொலை சுதந்திர இந்தியாவின் நல்ல பெயருக்கு ஏற்பட்டுவிட்டதொரு களங்கம். ஆயினும் "ஈவிரக்கமற்ற இந்தச் செய்கை ஒரு பைத்தியக்காரனுடைய வெறியின் விளைவல்ல. அதில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் கையும் வேலை செய்திருக்கின்றது" என்று இத்தாலிய பத்திரிகையான 'யூனிடா' குற்றஞ் சாட்டியிருப்பதை நாம் அலட்சியம் செய்துவிட முடியாது

இந்தியாவில் பிரிட்டிஷ் ரகசிய இலாகா ஆசாமிகள் இருந்துவருகின்றனர். தங்கள் வேலையைச் செய்ய அவர்களுக்குத் தெரியும். இந்த சம்பவத்திலும் அவர்களுடைய கை இருக்கத்தான் செய்கின்றது

ஈரான், எகிப்து, பாலஸ்தீனம் இத்தாலியில் கொலையுண்டவர்களும் கொலையுண்ட மகாத்மா காந்தியும் ஆறுவது ஜார்ஜ் மன்னர் முடியின் வைரங்களேயாவர். இவை அனைத்தும் தன்னை சோஷலிஸ்ட் என்றுசொல்லிக்கொள்ளும் மந்திரியான மிஸ்டர்ப்யூன் உடைய நடவடிக்கைகளின் விளைவுகளேயாகும்.

வகுப்புவாத அரசியலுக்கு முற்றுப்புள்ளி

இந்திய யூனியன் அரசியல் சரித்திரத்தில் மகாத்மா காந்தி பண்டித ஜவஹர்லால் நேருவைப் போலவே மௌலானா அபுல் கலாம் ஆஸாதின் பெயரும் பிரகாசிக்கப் போகின்றது. காந்திஜீயும் பண்டித நேருவும் தங்களுடைய அந்தரங்க சுத்தியுடன் கூடிய முயற்சிகளால் வகுப்புக் கலவரத்தீயை அணைத்தனர். மௌலானா அபுல் கலாம் ஆஸாத் தன்னுடைய அரசியல் அறிவைக்கொண்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்துவந்த நோயை நிவர்த்தி செய்தார். நோயை அறவே போக்க தான் கண்டுபிடித்த முறையை அறிவிக்க நவம்பர் 15-ல் இந்திய முஸ்லிம் தலைவர்களை டில்லியில் ஒன்று திரட்டி வகுப்புவாத கிருமிகளை போக்கிக்கொள்ளும்படியும் இந்திய யூனியனில் முஸ்லிம் லீகுக்கு மட்டுமின்றி லீக் மனப்பான்மைக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றும் யோசனை கூறினர். வகுப்புவாத ஸ்தாபனங்களைக் கலைத்துவிட்டு கூட்டு சமுதாய நல

னுக்காக ஏதாவதொரு பொதுஸ்தாபனத்தில் சேர்ந்துவிடவேண்டுமென்றும் வழி காட்டினார். முஸ்லிம் சமூகத்தின் குறிப்பிட்ட உரிமைகளைப் பாதுகாக்க ஜமீயத்துல் உலமாவை பலப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டார். மௌலானா ஆஸாத் சமர்ப்பித்த திட்டத்தை பரிசீலித்து முடிவு செய்ய டிசம்பர் இறுதியில் லக்னோ மஹாநாடு கூடிற்று. கிட்டத்தட்ட ஒரு லக்ஷம் இந்திய யூனியன் முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். மௌலானா ஆஸாதின் திட்டத்தை ஏற்று அதை நடைமுறையில் கொண்டுவருவதற்காக தேசத்தின் பல்வேறு பாகங்களிலும் பரவிவிட்டனர்.

அரசியலிலிருந்து விலகும் ஜமீயத்தின் எதிர்காலம்

அரசியலில் ஹிந்து முஸ்லிம் கூட்டு முயற்சியை ஜமீயத்துல் உலமா என்றுமே வற்புறுத்தி வந்திருப்பதுடன் காங்கிரஸில் சேரும்படி முஸ்லிம்களுக்கு யோஜனையும் கூறி வந்திருக்கிறது தேசீய பொருளாதார நலன்களில் ஒன்றாக பிணைக்கப்பட்டிருக்கும் மக்கள் அரசியலிலும் ஒன்றாகத்தான் இருக்கமுடியும். ஜில்லா போர்டுகள், முனிசிபாலிடிகள், கௌன்சில்கள், சட்டசபைகளின் நிர்வாகிகளை ஹிந்து முஸ்லிம் மெம்பர்கள் சேர்ந்தே தேர்ந்தெடுக்கின்றனர். இருவரும் சேர்ந்து ஓட்டுக்கொடுப்பதன்மூலமே எல்லா பிரச்னைகளும் தீர்க்கப்படுகின்றன. இந்நிலையில் உரிமைகளைப் பெறுவதிலும், பாதுகாப்பதிலும் சேர்ந்திருக்கக்கூடாது என்று சொல்லக் காரணமில்லை.

எனவே மேற்கூறிய கூட்டுசபைகளின் அங்கத்தினர்கள் கூட்டு முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதவசியம். தனித்தொகுதி தேர்தல் முறை கூட்டுப்பொறுப்பில் வேலை செய்யும் சபைகளின் இயற்கைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். தேசீய அரசியல் பிரச்னைகளில் ஹிந்து, முஸ்லிம் என்ற வேற்றுமையை இந்தியா என்றுமே ஒப்புக்கொண்டதில்லை. முஸ்லிம் அரசர்கள் ஹிந்து ராஜாக்களின் ஆட்சியாலும் ஹிந்து முஸ்லிம் என்ற பாகுபாடு இந்தியாவில் இருந்ததில்லை.

அக்பர் சக்ரவர்த்தியின் சமுதாயப்பற்றை விவரிக்க வேண்டிய அவசியமில்லை. ஜஹாங்கீரின் நியாயமும், சமத்துவமும் சரித்திரத்தில் முக்கிய ஸ்தானம் பெற்றிருக்கின்றன. அவருடைய பீரங்கிப்படைத் தலைவராயிருந்த ஒரு ஹிந்துவின் கீழ் ஐம்பதினாயிரம் பீரங்கிப்படையினரும் மூவாயிரம் பீரங்கிகளும் இருந்துவந்தன.

ஔரங்கசீப்பை வகுப்புவாதி என்று சொல்லப்படுகிறது அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த பதவிகள் முஸ்லிமல்லாதாரிடம் ஒப்படைக்கக்கூடாது என்று யோசனை கூறப்பட்டபோது "நாட்டின் நிர்வாகத்தில் பொறுப்பு வாய்ந்த பதவிகளுக்கு திறமைதான் முக்கியமேயொழிய மதமல்ல" என்று ஔரங்கசீப் பதிலளித்தார். அவருடைய ஆட்சியில் சாஹூ, ஜெயசிங், ஜஸ்வந்த் சிங், ராஜா சனியால், ராஜன்ஜி (சிவாஜியின் மாப்பிள்ளை)யும் ரஜபுத்திரர்கள், ஹிந்துக்களுமாக நூறுக்கு மேற்பட்ட முஸ்லிமல்லாதார் அரசாங்கத்தின் மிகப்பெரிய பதவிகளில் இருந்து வந்ததாக முன்ஷி கேவல் ராம் எழுதுகின்றார்.

மகாராஜா ரஞ்சித் சிங்கைப் போன்ற மதவாதியின் மந்திரிகளில் ஹிந்து சீக்கியர்களைப்போலவே முஸ்லிம்களும் இருந்தனர். பீர்சாதா அஸீஸுத்தீன் ரஞ்சித் சிங்கின் மந்திரியாக இருந்தார். இலாஹி பக்ஷ் என்ற முஸ்லிம் பீரங்கிப் படைத் தலைவராக இருந்தார்.

இப்ராஹிம் குர்தி என்ற முஸ்லிம் மராட்டிய பீரங்கிப் படைத் தலைவராக இருந்தார் செய்யது அஹமத் ஷஹீத் தன்னுடைய பீரங்கிப் படைக்கு ராஜாராம் என்ற ஒரு ராஜபுத்திரனை தலைவராக்கினார். லார்ட் வில்லியம் டிக்பி, W. M. டாரென்ஸ், சர் P ராம், பண்டித சுந்தர்லால் முதலியோர் இம்மாதிரியான அநேக உதாரணங்களை எழுதியுள்ளனர். ஹிந்து முஸ்லிம்களிடையே இருந்துவந்த பரஸ்பர நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையுமே அவை எடுத்துக்காட்டுகின்றன.

உண்மையில் இந்திய அரசர்கள் என்றுமே ஐக்கியப்படுத்தி ஆளும் கொள்கையையே அனுஷ்டித்து வந்திருக்கின்றனர்.

"இந்தியாவில் பல மதத்தினர் இருக்கின்றனர். ஆளும் பாக்கியம் உனக்குக் கொடுத்த இறைவனுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறாய். எல்லா விதமான மத பாகுபாடுகளையும் உள்ளத்திலிருந்து அகற்றிவிட்டு எல்லா மதங்களையும் கௌரவித்து நியாயம் வழங்கவேண்டும். இல்லையேல் இந்தியர்களின் உள்ளங்கள்மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. நேர்மையான ஆட்சியின் மூலமே விஸ்வாசமுள்ள பிரஜைகளை சிருஷ்டிப்பது சாத்தியம். அரசாங்கத்துக்கு அடங்கி நடக்கும் சமூகத்தினரின் தொழுகை ஸ்தலங்கள், சமாதிகள் பாதுகாக்கப்பட வேண்டும். பிரஜைகள் அரசனிடம் அன்பு கொள்ளும் வகையில் நியாயத்தைவழங்கு. அதர்மம், அடக்கு முறையை

(9-ம் பக்கம் பார்க்க)

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 24—5—'48 திங்கட்கிழமை { இதழ் 18

ஆத்திரத்தால் இயற்கை உறவு அறுந்துவிட முடியுமா?

இந்தியா சுதந்திரமடைந்து விட்டது. ஆயினும் அதைப் பாதுகாப்பதற்குத் தேவையான தகுதி நிரூபித்துக் காட்டப்படாதவரை திருப்தி யடைந்துவிட முடியாது. இத்துறையில் இதர முன்னேற்ற நாடுகளைவிட எவ்விதத்திலும் இந்தியா பின்னடைந்துவிடவில்லை என்பது வாஸ்தவந்தான். இந்தியாவின் இயற்கை வசதிகளையும் கல்வி, பண்பாடு, திறமை, தகுதி முதலிய சாதனங்களையும் இந்தியர்கள் உகந்த வழியில் பிரயோஜனப்படுத்திக் கொண்டால் ஆசியாவுக்கு மட்டுமின்றி உலகம் பூராவுக்குமே இந்தியா ஒரு எடுத்துக்காட்டாக விளங்கமுடியும். ஒரு தேசத்தின் சுபிட்சத்துக்கும், முன்னேற்றத்துக்கும் உள்நாட்டில் அமைதியான சூழ்நிலை அத்தியாவசியம். வல்லரசுகள் ஒரு நாட்டை ஆக்ரமிக்க திட்டமிடுகையில் முதலாவதாக அங்கு குழப்பத்தை உண்டுபண்ணுவதே வழக்கம். அதில் வெற்றி கிட்டியபிறகு மனித உரிமைகளின் பாதுகாப்பு என்ற பெயரால் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள முயற்சி செய்கின்றன. ஆக்ரமிப்புக்கு இவ்வித சாக்குப்போக்குகளே சொல்லப்பட்டு வந்திருப்பதை சரித்திரத்தில் காணலாம். அதிலும் விக்ஞான உதவியால் செய்தி ஒலிபரப்பு, போக்குவரத்தில் ஏற்பட்டிருக்கும் மின்னல்வேக வசதிகள் வல்லரசுகளின் வேலையை இன்னும் சுலபமாக்கிவிட்டன. இன்றைய சர்வதேச நிலைமையையும் இந்தியாவின் உள்நாட்டு நிலைமையையும் நோக்கும்போது நாடு நெருக்கடியான கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது என்பது விளங்கும். இரண்டு பெரியசக்திகளான ரஷ்யாவும் அமெரிக்காவும் ஒன்றையொன்று எதிர்த்து நிற்கின்றன. வெறுப்பும் விரோதமும் வளர்ந்து நாளுக்குநாள் பிளவு விஸ்தரித்து வருகிறது. பரஸ்பரம் அரசியல் சக்தியை முறியடிப்பதில் இரண்டு தேசங்களும் தீவிரமாய் முனைந்திருக்கின்றன. வார்த்தைகளில் விரோதம் த்வனிக்க ஆரம்பித்து விட்டது இரண்டு கோஷ்டிகளாகப் பிரிந்து மூன்றாவது உலக மஹாயுத்த அபாயத்துக்கு ஐரோப்பா அழைப்பு அனுப்பிவிட்டது. வெற்றி, தோல்வியைக் குறித்து முன்கூட்டிச் சொல்ல முடியாவிட்டாலும் ஆசியாவிலுள்ள சிறிய நாடுகளின் நிலைமை பாதிக்கப்படாமல் இருக்கமுடியாது என்பது நிச்சயம். சுதந்திரத்துடன் நிலைத்திருப்பதும் சிறிய நாடுகளுக்கு சிரமமாகப் போய்விடலாம் அந்நிலையில் இந்தியா மட்டும் பாதிக்கபடாமலிருக்க முடியுமென்று சொல்லுவதற்கில்லை. இன்று இந்தியாவில் அமைதி நிலவுகின்றது. ஆயினும் நாட்டின் முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமான ஒற்றுமை, ஐக்கிய உணர்ச்சி உள்ளங்களில்ஏற்பட வேண்டியதவசியம் சிறுபான்மையினருக்கு இதுவரை நம்பிக்கை ஏற்படமுடியவில்லை அத்துடன் பெரும்பான்மையினர் அவர்களை தங்களுடன் ஐக்கியப் படுத்திக்கொள்வதில் வெற்றியடையவுமில்லை காங்கிரஸ் மஹாசபையின் மாஜி ராஷ்டிரபதியான ஆச்சார்ய கிருபளானி டில்லி ஜாலியன்வாலா தினக்கூட்டத்தில் "முஸ்லிம்கள் இந்தியாவின் உண்மையான விசுவாசிகளாக இருந்தால் ஹைதராபாத்துக்கு சென்று இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை நிறுத்தும்படி ஹைதராபாத் சர்க்காரை நிர்பந்திக்க வேண்டும்" என்று பேசினர். தான் பேசியதை விளக்கி பிறகு வெளியிட்டதோர் அறிக்கையில் "ஒளிவு மறைவின்றி நான் பேசினது சில முஸ்லிம்களுக்கு பிடிக்காமலிருக்கலாம் ஆயினும் பாமரமக்கள் நினைப்பதையே நான் வெளியிட்டேன்" என்று தெளிவுபடுத்தினர். பாமர மக்கள் ஒருபுரமிருக்க பெரும்பான்மை சமுகத்தினரின் தலைவர்களுக்கும் சிறுபான்மையினர் மீது நம்பிக்கை ஏற்படவில்லையென்றே கிருபளானியின் பேச்சால் வெளியாகின்றது இன்று இந்தியாவிலுள்ள ஹிந்து முஸ்லிம்கள் ஒரே சமுதாயத்தினராகக் கருதப்படுகின்றனர். மத அடிப்படையற்ற அரசாங்கம் நடக்கின்றது அரசியலில் வகுப்புவேற்றுமைக்கு இடமில்லை. எல்லோருக்கும் சமஉரிமை வழங்கப்பட்டிருக்கிறது இந்நிலையில் ஹிந்து, முஸ்லிம் என்று பிரித்து முக்கியமானதொரு அரசியல் பிரச்னையில் குறிப்பிட்ட ஒரு காரியத்தை முஸ்லிம்களிடம் மட்டும்கோருவது எப்படி பொருந்த முடியும்? எந்த ஒரு தேசீயவாதியும் அதை வரவேற்க முடியாது. நடந்ததை மறந்துவிட வேண்டியதவசியம். எல்லோரும் தவறுசெய்திருக்கின்றனர். ரத்தக்கறைபடியாத கைகளுடைய ஒருவரும் இல்லை மனிதன் உணாச்சிவாய்ப்பட்டு காட்டுமிராண்டித்தனமாய் நடந்துவிட்டபிறகும் அதற்காக பச்சாதாபப்பட்டு பரிகாரமும் செய்யமுடியும். கடந்தகாலத்தவறு

நமது தேசியக் கடமை.

(சாத்தன்)
'சோலை' ஆசிரியர், வலங்கைமான்.

இன்றைய நிலைமையில் முஸ்லிம் சமூக முற்போக்கு லீகினால் தடைபட்டு வருகிறது. பாகிஸ்தான் ஏற்படுவதற்கு முன்பு போட்ட வெளிப்படையான கூச்சல்கள் இப்பொழுது இல்லாவிட்டாலும், சரியான மாறுதல் இன்னும் ஏற்படவில்லை.

இந்திய முஸ்லிம்களைப் பாழ்படுத்தி, அவர்களைக் கூச்சல் போடச்சொல்லி ஏமாற்றி பாகிஸ்தான் ஏற்படுத்திவிட்டனர். அதற்கு உடந்தையாக இருந்த தென்னிந்திய முஸ்லிம்கள் என்ன பலனைக் கண்டார்கள். பாடுபட்டுக் கூச்சல் போட்டதும், செய்த தொண்டும் வீணாகி விட்டதோடு, இன்று அவர்கள் தூற்றவும் படுகிறார்கள்.

இன்று திருந்திவரும் முஸ்லிம்களை இன்னும் பாதாளத்தில் தள்ள முயற்சிக்கும் சில லீக் பத்திரிகைகள் நடமாடிக்கொண்டிருக்கின்றன. அந்தப் பத்திரிகைகள் இன்னும் பாகிஸ்தான் புகழ் பல்லவியையே பாடிக்கொண்டிருக்கின்றன.

' இந்தியாவில் முஸ்லிம்களுக்கென தனி ராஜ்யம் ஒன்று இருந்தால்தான் முஸ்லிம்கள் பாதுகாப்புடனிருக்க முடியும். பாகிஸ்தான் இந்தியாவிலுள்ள பத்துகோடி முஸ்லிம்களுக்கும் நன்மை பயக்கும்" என்று லீக் தலைவர்கள் அன்று கூறினார்கள். இப்பொழுது என்ன நன்மை செய்கிறது பாகிஸ்தான்? முஸ்லிம்களுக்கென இருந்த சலுகைகளெல்லாம் போய்விட்டன. ஹிந்துஸ்தானத்திலுள்ள சில முஸ்லிம்கள் இன்றும் பாகிஸ்தானைப்பற்றி பிரலாபித்துக் கொண்டும், அதைப்பற்றி பெரிதாகப் பேசிக்கொண்டும் இருப்பதுதான் விந்தையிலும் விந்தையாக இருக்கின்றது.

இந்நிலையில், பாலைவனத்திலே ஏற்பட்ட சோலையைப்போல் தோன்றிய "ஆஸாதை," மக்கள் இன்னும் அறிந்துகொள்ளாமலிருக்கின்றார்கள். பாகிஸ்தான் எண்ணம் இன்னும் மறையாமலிருப்பதுதான் அதற்குக்காரணம். இன்னுஞ் சிலர் 'பாகிஸ்தானால் பலனில்லை' என்பதை உணராமலேயே இருக்கின்றார்கள். தவறை உணர்ந்து, அதனால் நன்மையில்லை என்று அறிந்த பிறகுதான் ஒருவன் மற்ற ஒன்றை விரும்ப நினைக்கிறான். விரும்புகிறான். இன்னும் தங்கள் எண்ணங்களை மாற்றிக் கொள்ளாமல் தவறை உணராமல் இருக்கும் மக்களிடையே எப்படி "ஆஸாத்" பரவமுடியும்? அதற்கு அதிக நாட்களாகாது என்றே சொல்லலாம். பிறகு "ஆஸாதின்" நன்மையையும், பெருமையையும் புகழுவார்கள்.

தவறை உணர்ந்து திருந்திவரும் மக்களின் தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது. அப்படித் திருந்திவருவதற்கு 'ஆஸாதின்" சேவையே காரணம் என்று திண்ணமாய்க் கூறலாம். ஏனெனில் மக்களிடையே பாகிஸ்தான் பூசலை எடுத்துக்காட்டும் சக்தி 'ஆஸாத்" ஒன்றுக்கே இருக்கிறது.

ஒரு லீக்பத்திரிகை "ஆஸாதை" பகிஷ்கரிக்கவேண்டும் என்று கூச்சல் போடுகிறது. அந்த பத்திரிகை

(இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

களை பகிரங்கமாக ஒப்புக்கொண்டு வருங்காலத்தில் நேர்மையுடன் நடந்துகொள்வதாக சபதம் செய்வதுடன் மாபெரும் அழிவுக்கு காரணமாயிருந்த வேற்றுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து சுமுகமான ஐக்கிய சூழ்நிலை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். சண்டை செய்யாதவர்கள் யார்? சகோதரர்களிடையே, தகப்பனுக்கும் மகனுக்குமிடையே சண்டைகள் நடந்திருக்கின்றன. தகப்பனுக்கு எதிராக மகன் படையெடுத்திருக்கிறான். சரித்திரம் இவ்வித சம்பவங்களால் நிறைந்திருக்கிறது. ஆயினும் தாற்காலீக உணர்ச்சி, ஆத்திரத்தால் பரஸ்பர தொடர்பும் இயற்கை உறவும் அறுந்துவிட முடியுமா? ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பிணைக்கப்பட்டிருக்கின்றனர். இருவரும் நாட்டின் புத்திரர்களேயாவர். ஒருவருக்கு தீங்கு செய்யக்கூடிய விஷயம் உடனடியாகவோ, தாமதித்தோ மற்றவருக்கும் தீங்கு செய்யக்கூடியதாகவே இருக்கும். இந்நிலையில் ஐக்கிய உணர்ச்சியுடன் நடப்பதிலேயே இருவருக்கும் லாபமுண்டு. பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பாகுபாட்டினால் ஏற்படும் ஏற்றத்தாழ்வு உணர்ச்சி போக்கப்படவேண்டும். தனிப்பட்ட அல்லது சமூக வாழ்க்கையில் தோன்றும் ஏற்றத்தாழ்வு உணர்ச்சியே சில சந்தர்ப்பங்களில் மாபெரும் அழிவுக்கு காரணமாயிருந்திருப்பதை உலகம் கண்டிருக்கிறது. எந்த மதத்தைச் சேர்ந்தவனாயிருப்பினும் இந்தியன் என்ற உணர்ச்சியில் இந்தியாவுக்கு சேவை செய்வதில் மற்றவர்களைவிட முந்திக் கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் ஒன்றே நாட்டுக்கு விமோசனமளிக்கமுடியும்.

காந்திஜி கொலைக்குக் காரணம் யார்?

தேச பிதாவின் கொலைக்குக் காரணம் நத்தூராம் அல்ல. வகுப்புவாதமே. உண்மையான கொலையாளியை அரசாங்கத்தால் தண்டிக்கமுடியாது. நாம் அனைவரும் சேர்ந்து தண்டனை விதிப்போம். வகுப்பு வாதத்தை வேரறுத்து வீழ்த்துவோம்.

மகாத்மா காந்தியின் மறைவு குறித்து அநுதாபம் தெரிவிக்கையில் "உலகத்தின் மிகப் பெரிய மனிதரை இந்தியா கொன்றுவிட்டது" என்று அரபு லீக் தலைவர் அபிப்பிராயப்பட்டார். 'மகாத்மா காந்தியைக்கொன்று இந்தியா உலகத்தில் மிகப் பெரிய பாபத்தை செய்துவிட்டது" என்று எகிப்திய பிரதமர் நக்ராஷிபாஷா கூறினர் 'மகாத்மா காந்தியை நம்மால் காப்பாற்றமுடியாமல் போய்விட்டது" என்று சர்தார் வல்லபாய் படேல் துக்கித்தார். இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு வெட்கித் தலை குனிந்தார். மகாத்மா காந்தியின் இன்றுள்ள சகாக்களில் நீண்டநாள் சகாவான மௌலானா அபுல் கலாம் ஆஸாதோ "மகாத்மா காந்தியை நத்தூராம் கோட்ஸே மட்டும் கொல்லவில்லை. நிதானமாய் சிந்தித்துப் பார்க்கும்போது மகாத்மா காந்தியின் ரத்தக்கறை என்னுடைய கைகளிலும் படிந்திருப்பதாக உணருகிறேன்" என்று ஒவ்வொரு இந்தியனும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் தெளிவாகஎடுத்துச் சொன்னர்.

எனவே நம்முடைய கைகளிலும் ரத்தக்கறைப் படியும்படி நாம் செய்த தவறுகள் என்ன? மகாத்மா காந்தியின் கொலைக்கு உண்மையான காரணங்கள் எவை? என்று நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

1. கடந்த பத்து வருஷங்களாய் நடந்துவந்த வகுப்புவாத பிரசாரம் அநேக ஹிந்து வாலிபர்களின் மனதிலும் வகுப்பு வாத உணர்ச்சியை புகுத்திவிட்டது.

2. முஸ்லிம் லீக் பாஸிஸம் அடைந்த வெற்றியால் பொருமைப் பட்டு அநேக ஹிந்து வாலிபர்களும் லீக்கின் பாஸிஸப்போக்கை காப்பி அடிக்க ஆரம்பித்தனர்.

3. முஸ்லிம் லீகுக்கு எதிராக காங்கிரஸ் அநுஷ்டித்து வந்த சேம்பர்லீன் கொள்கை.

4. நிர்ப்பந்தமான முறையில் தவிர்க்க முடியவில்லை என்பதற்காக பிரிவினையை காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளுதல்.

5 பிரிவினையால் இந்தியர்களிடையே ஏற்பட்ட அதிர்ச்சியும் தோல்வியடைந்தோம் என்ற உணர்ச்சியும்.

6. புரட்சியின்றி ரத்தம் சிந்தாமல் காங்கிரஸும் குறிப்பாக மகாத்மா காந்தியும் வாங்கிக் கொடுத்த சுதந்திரத்தின் உண்மையான மதிப்பை மக்கள் உணராமல் போனதும் இலவசமாக கிடைத்துவிட்டதாக எண்ணி மக்கள் தான்தோன்றித்தனமாய் நடக்க ஆரம்பித்ததும்.

7. பிரிவினை பரிகாரமல்ல. ஒரு சூழ்ச்சியே. பாகிஸ்தான் இருக்கும்வரை நாம் அமைதியாக வாழ முடியாது என்று இந்தியர்கள் நினைக்கும்படி ஆகஸ்ட் 15-க்குப்பிறகும் பாகிஸ்தான் செய்த தகிடுதத்தங்கள்.

8. பாகிஸ்தானுடன் இந்தியாவின் 'பொருத்துப் பார்ப்போம்' கொள்கையும் சிநேக பாவமான போக்கும்.

9. அதிகாரம் கைக்கு வந்த பிறகும் வகுப்பு வாதத்தை நசுக்காமல் அதனுடன் சமாதானம்செய்து கொள்ளக்கூடிய வகையில் காங்கிரஸின் தேசீய சர்க்காரில் ஹிந்து மகா சபைக்காரர்களுக்கும் இடமளித்தது

10 லீக் தலைவர்களின் பேச்சைக் கேட்டு நெருக்கடியானசமயத்தில் முஸ்லிம் போலீஸ், ராணுவ அதிகாரிகள் பாகிஸ்தானுக்கு சென்றுவிட்டதும், அதனல் பொதுமக்களைத் தூண்டிவிட வெள்ளையர்களின் உண்மை விசுவாசிகளான ஐ. சி எஸ். அதிகார வர்க்கத்துக்குசந்தர்ப்பம் கிடைத்ததும் வேறு வழியின்றி அரசாங்கம் அவர்களிடமே நிலைமையை ஒப்படைக்க வேண்டி ஏற்பட்டதும்

11. எல்லாவற்றையும் விட காங்கிரஸ் தூங்கிக் கொண்டிருந்து பொதுமக்களுடன் தொடர்புகொள்ளாமலிருந்ததும் அரங்கத்தை சேவக் சங்கத்தைப் போன்ற வகுப்புவாதிகளிடம் ஒப்படைத்து விட்டு கடமையை மறந்து காங்கிரஸ்காரர்கள் சுயநலத்திலும் பதவி வேட்டையிலும் இறங்கி விட்டதும்.

தேசத்தில் வகுப்புவெறி தலைவிரித்தாடி முடிவில் மஹாத்மாவின் உயிருக்கு உலைவைத்ததற்கு பொதுவாக மேற்கூறிய விஷயங்களே காரணம் வகுப்பு வெறியால் நிதானமிழந்து விட்டவர்களில் ஹிந்து,

பாலஸ்தீனப் போர்.

பாலஸ்தீனத்தின் புனித பூமி யூத, அராபிய ரத்தத்தால் சிவந்து வருகிறது. ஒரு காலத்தில் சாந்தம், அமைதியின் உறைவிடமாக விளங்கிய நாடு இன்று பலாத்காரத்துக்கும் சூழ்ச்சிக்கும், இலக்காகிவிட்டது. அன்பின் உபதேசிகளுக்கு தெள்ளிய நிழலை கொடுத்துக்கொண்டிருந்த ஆலிவ் புதர்கள் எரி வெடிகளால் பொசுங்குகின்றன காற்றிலே மிதந்துவந்து இன்ப மூட்டிக்கொண்டிருந்த சரித்திரப் பெருமை வாய்ந்த இடையர்களின் இனிய குழலோசைக்குப் பதில் இன்று பீரங்கிகளின்முழக்கம் காதுகளை துளைத்துக்கொண்டிருக்கின்றது.

இன்றையநிலைமைக்கு யார் பொருப்பாளி என்று தெரிந்துகொள்ள வேண்டுமாயின் கடந்த முப்பது வருஷங்களில் பாலஸ்தீனத்தில் நடந்த சூழ்ச்சிகளை முதலில் தெரிந்துகொள்ளவேண்டியதவசியம்.

பாலஸ்தீனம் மத்தியதரைக்கடல் தென்கிழக்குக் கரையிலிருக்கும் ஒரு பிரதேசம். அதன் நிலப்பரப்பு பத்தாயிரத்து நானூற்றிருபது சதுரமைல். மத்திய கிழக்கில் கேந்திர ஸ்தானமாக கருதப்படுகின்றது அதில் கால் ஊன்றிக்கொண்ட பிறகு மத்தியகிழக்கு நாடுகள்மீது ஆதிக்கம் வகிக்கவும் தூரக்கிழக்கு நாடுகளுடன் துடர்பு கொள்ளவும் அவைகளின் பிரச்னைகளில் சுலபமாய் தலையிடவும் முடியுமென்பது ராணுவ நிபுணர்களின் அபிப்பிராயம்.

1914-வரை துருக்கி ஆட்சிக்கு உள்பட்ட ஒரு மாகாணமா யிருந்து வந்தது. அதுவரை அங்குவசித்துவந்த யூதர்களின் எண்ணிக்கை ஐம்பதினாயிரத்துக்கு மேல் இருக்கவில்லை.

1915-ல் துருக்கி அரசாங்கத்துக்கு எதிராக அரபியர்களை ஏமாற்றி கிளப்பி விடுவதில் லாயிட்ஜார்ஜ் சர்க்காரின் சுயநலம் வெற்றியடைந்துவிட்டது சுதந்திர அரபு ஆட்சியின் உறுதியைப் பெற்று பிரிட்டிஷாருடன் சேர்ந்துகொண்டு அரபியர்கள் துருக்கிமீது படையெடுத்தனர். அதனால்துருக்கியின் உஸ்மானியா கிலாபத் ஆட்சி அரேபிய மண்ணிலிருந்து வாபஸாக நேர்ந்தது.

துருக்கியின் கீழ் நிம்மதியாய் வாழ்ந்து வந்தது போய் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கனமான உருக்குச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருக்கும் உண்மையைச் சுதந்திர அரபு ஆட்சியின் மயக்கம் தெளிந்தவுடன் அரபியர்கள் உணர்ந்தனர் பாலஸ்தீன், சிரியா ட்ரான்ஸ் ஜார்டன் முதலிய பிரதேசங்களை பிரிட்டன் ஆக்ரமித்துக்கொண்டது. சுதந்திர அரபு ஆட்சி பற்றிய உறுதி மொழிகளெல்லாம் காற்றுவாக்கில் பறந்தன.

அரபியர்களுக்கு உறுதியளித்த அதே பிரிட்டன் 1917-ல் பாலஸ்தீனத்தில் ஒரு தனித் தாயகம் ஏற்படுத்திக் கொடுப்பதாக யூதர்களுக்கும் உறுதியளித்தது. அரபியர்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். அதன் பயனாக லீக்ஆப் நேஷன்ஸும்பாலஸ்தீன அராபியர்களின் சுதந்திர உரிமையை அங்கீகரித்தது. ஆயினும் யூத தாயகத்தை ஆதரித்து வெளியான பால்போர் அறிக்கையால் லீக் ஆப் நேஷன்ஸின் அங்கீகாரம் குப்பைக் கூடைக்குப் போய்விட்டது.

1939 ஜன சங்கியைப்படி பாலஸ்தீனத்தின் மொத்த ஜனத்தொகை பதினைன்கு லட்சத்து முப்பத்தையாயிரம். அதில் பத்துலட்சம்பேர் அரபியர்கள்

முஸ்லிம், தேசியவாதி, வகுப்புவாதி என்ற வித்தியாசமில்லை.

தலைவர்களின் ஆத்திரமூட்டும் பிரசங்கங்கள், பத்திரிகைகளின் வகுப்புவாதப் பிரசாரம், வகுப்பு வெறியைப்பேணி வளர்த்தன. உள்ளங்களில் குமுறிக்கொண்டிருந்த வகுப்புவாதம் முடிவில் வாள், ஈட்டி, பிச்சுவா, துப்பாக்கி, ஷோட்டா, வெடி, பீரங்கி, ரூபத்தில்வெளியாயிற்று. நகரங்கள்பொசுங்கி சாம்பலாய்க் குவிந்தன. லட்சக்கணக்கில் நிரபராதிகள், பெண்கள் குழந்தைகள் கிழவர்கள் வெட்டி வீழ்த்தப் பட்டனர். கோடிக் கணக்கானவர்கள் பரதேசிகளாய் அலைந்தனர். போதாக் குறைக்கு முடிவில் மகாத்மா காந்தியையும் சுட்டு விழ்த்திவிட்டது.

மகாத்மாவின் கொலையாளியை விட்டுவைக்க விரும்பாவிட்டால் நாம் அனைவரும் சேர்ந்து சரியான தண்டனை கொடுக்கவேண்டும், அதற்குச்சிறந்த வழி வகுப்புவாத ஸ்தாபனங்களை குழிதோண்டிப் புதைப்பதேயாகும். மஹாத்மாவின் கொலையாளியை சிருஷ்டித்த வகுப்புவாத ஸ்தாபனங்களை உடைத்தெறிவதன்மூலமே நாம் உண்மையான குற்றவாளிக்கு சரியான தண்டனை கொடுக்க முடியும். முஸ்லிம்களுக்காக மகாத்மா உயிரை அர்ப்பணித்தார். மஹாத்மா வஞ்சம் தீர்ப்பதை வரவேற்கவில்லை. ஆயினும் முஸ்லிம்களாகிய நாம் மஹாத்மா கொலைக்கு பழிக்குப்பழி வாங்குவோம் ஆனல் ஒரு நத்தூராம் கோட்ஸே மீது அல்ல. வகுப்புவாதத்தின் மீது. வேற்றுமை மீது. துவேஷத்தின்மீது அன்பு, சகோதரத்துவ ஆயுதத்தால் சகிப்புத் தன்மையைத் துணையாய்க்கொண்டு.

எஞ்சியுள்ளவர்கள் யூதர்கள். இன்று பாலஸ்தீனில் பதிமூன்று லட்சம் அரபியர்களும் ஆறு லட்சத்துக்கு மேல் யூதர்களும் இருக்கின்றனர் 1914-ல் ஐம்பதினாயிரத்துக்கும் குறைவாக இருந்த யூதர்கள் இன்று ஆறு லட்சத்துக்கும் அதிகமாக எப்படிப் பெருகிவிட்டனர் என்பதுதான் கேள்வி.

அரபியர்களின் எண்ணிக்கைக்கு நிகராக யூதர்களைக் குடியேற்றி பாலஸ்தீனத்தை கூறுபோடவேண்டுமென்பதே பிரிட்டன் போட்டிருந்த திட்டம். தாங்கள் ஏமாற்றப்பட்டிருப்பதை அரபியர்கள் உணர்ந்துவிட்டனர். அவர்களுடைய கடுமையான எதிர்ப்பால் யூதர்களை குடியேற்றுவதில் பிரிட்டிஷ் தந்திரம் விரும்பிய அளவுக்கு பலிக்காமல் போய்விட்டது.

இரண்டாவது உலக மஹா யுத்த முடிவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய கட்டிடம் தகர்ந்துபோயிற்று. ஆசிய, ஐரோப்பா கண்டங்களில் பிரிட்டன் வகித்து வந்த செல்வாக்குக்கும் ஆதிக்கத்துக்கும் முற்றுப் புள்ளி விழுந்தது. இந்நிலையில் இயற்கையாக பாலஸ்தீனிலிருந்தும் பிரிட்டிஷ் ஆதிக்கம் வாபஸாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது

இன்று பாலஸ்தீனத்தில் பதிமூன்று லட்சம் அரபியர்களும் ஆறுலட்சம் யூதர்களும் ரத்தம் சிந்திக்கொண்டிருப்பதற்கு இருவருக்கும்பிரிட்டன் அளித்த முரண்பட்ட வாக்குறுதிகளே காரணம். யூதர்களும் அரபியர்களும் ஒருவரை ஒருவர் சுட்டுத் தள்ளிக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் இருவரையும் சிண்டு முடிந்துவிட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பாலஸ்தீனிலிருந்து மறைந்துவிட்டது.

இதற்குமுன் பலமுறை பாலஸ்தீனை கூறுபோட முயற்சிகள் நடந்தன சென்ற நவம்பரில் ஐக்கிய நாட்டு பொதுசபை பாலஸ்தீனத்தை மூன்று கூறுகளாகப் பிரிக்க இறுதியாக முடிவு செய்தது. வளமான பிரதேசங்கள் யூதர்களுக்கும், நிர்மானுஷ்யமான மலைப் பிரதேசங்கள் அரபியர்களுக்கும் ஒதுக்கப்பட்டன. புனித ஸ்தலமாகிய ஜெருசலேம் ஐக்கிய நாடுகளின் பெயரால் ஐரோப்பிய கிருஸ்துவ நாடுகளின் ஆதிக்கத்திலேயே எப்பொழுதும்போல் இருந்துவர ஒப்படைக்கப்பட்டது.

அரபுநாடுகள் ஐரோப்பிய அடிமையிலிருந்து விடுதலை பெற்று, சூயஸ் கால்வாய் மீது மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இருந்துவரும் ஆதிக்கம் நீங்கிய பிறகு, மூன்ருவது யுத்தம் ஒன்று ஆரம்பமாகும் பட்சத்தில் ரஷ்யாவுக்கு எதிராக ராணுவ தளமாய் உபயோகிப்பதற்கு அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் கேந்திரஸ்தானம் ஒன்று இருக்கவேண்டுமென்பதே யூத அரசாங்கம் ஏற்படுத்தப்படுவதன் உண்மை நோக்கமாகும். மூன்ருவது யுத்தத்தில் அரபியர்களின் போக்கு நேசநாடுகளுக்கு சாதகமாக இல்லாமல் போவதும் சாத்தியமே. அந்நிலையில் அரபு நாடுகளின் மத்தியில் யூத அரசாங்கம் பிரிட்டன் அமெரிக்க தளமாக இருக்கமுடியும்.

அரபியர்கள் இந்த நிலைமைக்கு இணங்க முடியாது. தங்களுக்கும் உலகத்துக்கும் எதிராக அந்நிய ஏஜெண்டுகள் பாலஸ்தீனத்தில் சூழ்ச்சி செய்வதற்கு இடமளிக்க அரபியர்கள் மறுக்கின்றனர். பிரிட்டிஷ் வெளிநாட்டு இலாகா என்றுமே சர்வதேச சூழ்ச்சிகளில் பிரக்கியாதி பெற்று வந்திருக்கிறது. யூதர்களின் சூழ்ச்சி மனப்பான்மையோ உலகுக்குத் தெரியும் யூதர்களின் சரித்திரமே அதை நிரூபித்துக் காட்டுகின்றது. எனவே அராபியர்கள் பிரிட்டிஷ், யூத இரட்டை சூழ்ச்சிகளுக்கு இலக்காக தயாராயில்லாமலிருப்பது இயற்கையே.

கூர்ந்து கவனித்தால் பாலஸ்தீன் யூத அராபிய யுத்தத்திரை மறைவில் பிரிட்டன், அமெரிக்க, ரஷ்ய பலப்பரீட்சை நடந்து வருவதைப் பார்க்கமுடியும். பாலஸ்தீனில் யூத, அராபிய, பிரிட்டிஷ், அமெரிக்க நலன்களை மோதவிட்டு சந்தர்ப்பம் கிடைக்கும்போது உள்ளே நுழைந்து சோவியத் கூடாரத்தைப் போட்டுக்கொள்ளவே ரஷ்யா விரும்புகிறது.

ஆசிய அரங்கத்தில் ரஷ்யாவுக்கு எதிராக பாலஸ்தீனை தளமாகவும் ஆயுத கிடங்காகவும் உபயோகிக்க வேண்டுமென்பது அமெரிக்காவின் ஆசை. பாலஸ்தீனிலுள்ள வடக்கு, தெற்கு பிரதேசங்களும் மத்திய தரைக் கடற்கரையும் யூதர்கள் வசமிருந்தால் ரஷ்யாவுக்கு எதிராக அணு குண்டுகளை சேகரிக்க யூதர்கள் தன்னுடன் பரிபூரணமாய் ஒத்துழைப்பரென்றும் நம்புகிறது. யூதராஜ்யத்தை அமெரிக்கா ஆதரிப்பதற்கு அதைத்தவிர வேறு நியாயமான காரணம் இருக்க முடியாது.

மே 15 உடன் பிரிட்டிஷ் ஆட்சி பாலஸ்தீனை விட்டு வாபஸாய்விட்டது. கடந்த முப்பது வருஷங்களில் துருக்கியின் பலத்தை ஒடுக்கி அராபிய ஐக்கியத்தை சிதறடிக்கும் வேலையில் பிரிட்டன் வெற்றி அடைந்தாயிற்று. சுதந்திர அரபு ஆட்சியின் உறுதியளித்து அராபியர்களை ஒரு டஜனுக்கும் அதிகமான கூறுகளாகப் பிரிக்கும்வேலை முடிவடைந்து விட்டது. அரபுகளின் அர்த்தமற்ற கூறுகள் எப்பொழுதும் பிரிட்டிஷ் தயவை நாடியிருக்க வேண்டுமென்பதே பிரிட்டனின் நோக்கம். சமயம் வரும்போது தன்னு

டைய காரியத்தை சாதித்துக்கொள்ள அப்பொழுது தான் சாத்தியமாக இருக்கமுடியும்.

யூதர்களுக்காக என்று அமைக்கப்படும் இஸ்ரேல் ராஜ்யத்தில் உலகத்தின் பல்வேறு பாகங்களில் வசித்துவரும் யூதர்களை குடியேற்ற முடியுமா என்பதை சிந்தித்துப் பார்க்காமலிருக்க முடியாது. அப்படிப் பார்க்கும்போது இஸ்ரேல் ராஜ்யத்தின் லட்சியம் யூதர்களின் தாயகமல்ல என்பது விளங்கும்.

உலகத்தின் பல்வேறு நாடுகளில் இருந்துவரும் யூதர்களின் எண்ணிக்கை கீழே தரப்படுகின்றது.

தேசம்	யூத எண்ணிக்கை
அமெரிக்கா	50 லட்சம்
போலந்து	30 ,,
பாலஸ்தீனம்	6 ,,
பிரான்ஸ்	3 ,,
எகிப்து	95 ஆயிரம்
ரஷ்யா	30 லட்சம்
ருமேனியா	8 ,,
இங்கிலாந்து	3 ,,
ஜெர்மனி	3 ,,

உலகம் பூராவிலும் ஏறக்குறைய ஒன்றரை கோடி யூதர்கள் இருக்கின்றனர். பத்து லட்சம் மக்களைக்கொண்டதொரு நாட்டில் ஆறுலட்சப்பேர் குடியேற்றப்பட்டதால் தாங்கமுடியாமல் கொந்தளித்துக் கொண்டிருக்கும்போது மேலும் ஒன்றரை கோடி மக்களை குடியேற்ற முயற்சிப்பது அமெரிக்கா, பிரிட்டன், ஐக்கியநாட்டு ஸ்தாபனத்தின் சூழ்ச்சியைத் தவிர வேறுஎதுவாக இருக்கமுடியும்.

யூத நாட்டின் பெயரால், மேற்கு ஆசியாவின் ஜீவநாடியில், மூன்ருவது யுத்தம் ஆரம்பிப்பதற்குள், ரஷ்ய எதிர்ப்புதளம் ஒன்று அமைக்க முயற்சிகள் நடக்கின்றன. பிரிட்டிஷ் அமெரிக்க ராணுவம், தளவாடங்கள், உணவுப்பொருள் சப்ளைகள், பெட்ரோல் முதலியவைகளுக்கு இஸ்ரேல் ராஜ்யத்தின் திரையிட்டு மூடிவைக்க முயற்சிக்கப்படுகிறது. பிரிட்டிஷ் அமெரிக்க கோஷ்டியின் ஆகாயக்கோட்டை அரபியர்கள் ஆவேசப் பாறைமீது மோதி சுக்குநூருய் தகரப்போவது நிச்சயம்.

பாலஸ்தீனம் பல மதத்தினரால் புனிதமாகக் கருதப்படும் புண்ணிய ஸ்தலம். முஸ்லிம்களின் முதலாவது காபாவாகும். அநேக தீர்க்கதரிசிகள் அடக்கியிருக்கின்றனர். ஆறுகோடி அரபியர்கள், எழுபது கோடி முஸ்லிம்கள், உண்மைக் கிருஸ்துவர்கள் அதை பாதுகாக்க கடமைப்பட்டிருக்கின்றனர். ஐக்கிய நாட்டு சூழ்ச்சி அதைக்கூறுபோட்டு விடமுடியாது. பாஸ்தீனைப் புனித ஸ்தலமாகக்கருதும் அனைவரும் பிரிவினையை எதிர்த்து பகிரங்கமாய் போராடுவர். பிரிவினை வற்புறுத்தப்படுமானுல் பாலஸ்தீன உள்ளத்திலிருந்து மூன்ருவது உலக மஹாயுத்த எண்ணம் விழித்தெழப் போகின்றது. அந்த யுத்தம் அமெரிக்கா பிரிட்டனிலுள்ள சூழ்ச்சிக்காரர்களை யூதர்களுடன் சேர்த்து அழித்து உலகத்திலிருந்து முதலாளித்துவமே மறையப்போவது நிச்சயம்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விட அன்பினுல் இஸ்லாம் அதிக வளர்ச்சியடைய முடியும். பஞ்ச பூதங்களின் ஐக்கியத்தால் மனித சரீரம் நிலைத்திருப்பதைப்போலவே பல்வேறு மதத்தினரை ஐக்கியப்படுத்திவைப்பதன் மூலம் ஆட்சியும் நிலைத்திருக்க முடியும்'' என்று பாபர் சக்ரவர்த்தி ஹுமாயூனுக்கு புத்திமதி கூறினர்.

இந்திய அரசர்கள் இந்தியர்களை ஐக்கியப்படுத்துவதற்காக செய்த முயற்சிகளின் பலனாக இந்தியாவெங்கும் ஹிந்து முஸ்லிம்கள் கலந்து வாழுகின்றனர். கூட்டு வியாபார ஸ்தலங்கள் ஏற்பட்டன. கூட்டு வாழ்க்கைத்தரம் உருவாயிற்று. அதன் பிறகு இயற்கையாகவே ஹிந்து முஸ்லிம்களுக்கு ஒரு கூட்டு பாஷை இருக்க வேண்டிய அவசியத்தையொட்டி உர்து அல்லது ஹிந்துஸ்தானி பாஷையும் ஜனனம் எடுத்தது.

வரவேற்கிருேம்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை, முன்னேற்றம், சமுதாய, ஜனநாயக சோஷலிஸ, கூட்டுக் கலாசார, அடிப்படையில் அரசியல், பொருளாதார, சரித்திரக் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை வரவேற்கிருேம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதும்படி கேட்டுக் கொள்கிருேம். இதர விபரங்கள் தபால் மூலம்.

மானேஜர், ஆஸாத், கும்பகோணம்.

ரஸ்வி, தாராசிங் வேஷத்தில் வெள்ளை ஏஜண்டுகள்

வகுப்புவாதத்துக்கு அன்பே மருந்து.

—(மௌலானு ஹபீபுர் ரஹ்மான்)—

அடிமை சகாப்தத்தின் கடைசி வருஷங்களில் பம்பாயின் நல்ல பெயர் வகுப்புக் கலவரங்களால் கெட்டுப்போயிருந்தது. ஆயினும் ஆகஸ்ட் 15-க்குப் பிறகு பம்பாயில் அமைதியான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. சமீபத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டமும் ஜமீயத்துல் உலமா வருஷாந்திரக் கூட்டமும் பம்பாயில் நடந்தபோது பண்டித நேரு, மௌலானு ஆஸாத், ஷைகுல் ஹிந்த் மௌலானு மதனி, ராஜன்பாபு, மௌலானு ஹிப்சூர் ரஹ்மான், மௌலானு ஹபீபுர் ரஹ்மான் முதலிய தலைவர்களின் சொற்பொழிவுகளால் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பொது மக்களிடையே பரஸ்பர நம்பிக்கை உண்டாகி ஹிந்து முஸ்லிம்களின் ஐக்கிய கூட்டங்கள் நடந்து வருகின்றன. அதனுல் ஐக்கிய சமுதாய உணர்ச்சி பலமடைந்து வருகிறது.

நேற்று இரவு ஜும்மா மசூதிக்குமுன் ஹிந்து முஸ்லிம்களின் கூட்டம் ஒன்று விமரிசையாக நடந்தது. கணபதி சங்கர தேசாய் தலைமை வகித்தார். கண்டுபாய் (பம்பாய் சமாசார் ஆசிரியர்,) மௌலானு ஹபீபுர் ரஹ்மான் முதலியோர் பேசினர்.

“ காந்திஜி, பக்கீர், சாது மட்டுமல்ல. நேர்மையுள்ள முதல்தர அரசியல் வாதியுமாவார்.” என்று மௌலானு ஹபீபுர் ரஹ்மான் குறிப்பிட்டார்.

1942 பரீட்சை.

மேலும் அவர் “ 1942-ம் வருஷ ‘ இந்தியாவை விட்டு வெளியேறு, இயக்கம் இந்தியாவின் நண்பர்கள், விரோதிகளை தெரிந்துகொள்வதற்காக ஒரு பரீட்சையாக இருந்தது. நாட்டுக்கும் மக்களுக்கும் ஆபத்து என்று சொன்ன குற்றத்துக்காக காங்கிரஸ், ஜமீயத் தலைவர்களை வெள்ளையர்கள் சிறையிலடைத்தனர். ஆனல் இஸ்லாமுக்கு ஆபத்து, ஹிந்து தர்மத்துக்கு ஆபத்துஎன்று தேசத்தின் விரோதிகள் சொல்லி வந்தனர். மிஸ்டர் ஜின்னு சொல்லி வந்ததையே சாவர்க்கரும் தாராசிங்கும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். வெள்ளையருடைய குரல் அவர்களுடைய வாய்களிலிருந்து வெளிவந்துகொண்டிருந்தது.”

பாகிஸ்தான் அடிமை போக்கு

“ அமெரிக்காவிடமிருந்து கடன் கேட்கவும், பிரிட்டிஷ் காமன் வெல்திலேயே இருக்கப்போவதாக அபிப்பிராயம் வெளியிடவும் அதற்குள் பாகிஸ்தான் ஆரம்பித்துவிட்டது. தன்னுடைய சுதந்திரத்தை இழந்துவிட்டு அடிமையாகவே இருக்கப்போகின்றது. இந்திய ஹிந்துக்களும் ஹிந்து ராஜ்யக்கோஷம் போட்டால் இந்தியாவும் ஹிந்துக்களும் போய் அடிமைத்தனம் திரும்பவும் வந்துவிடும்.”

“வெள்ளையர்களின் கெட்ட திருஷ்டி இந்தியாவை விட்டு இன்னும் அகன்றுவிடவில்லை. ராணுவ, விமான தளங்கள், துறைமுகங்களை தங்களுடைய பெயருக்கு பட்டா செய்துகொடுக்கக்கூடிய ஒரு ஆட்சி இங்கு ஏற்படவேண்டுமென்றே வெள்ளையர்கள் விரும்புகின்றனர்.

காசிம் ரஸ்வியும், தாராசிங்கும்

“ ரஸ்வி, தாராசிங் வேஷத்தில் இன்றைக்கும் வெள்ளை ஏஜெண்டுகள் இங்கு இருந்தே வருகின்றனர். ரஸ்வியும் இத்திஹாதுல் முஸ்லிமீனும் வெள்ளையர்கள் பேச்சைக்கேட்டு கூத்தாடுகின்றனர். இந்திய ஹிந்துக்கள் ஆத்திரமடைந்து இங்குள்ள முஸ்லிம்களை கொல்ல ஆரம்பிப்பதால் இந்தியாவின் அமைதி குலைந்து வெள்ளையன் வெற்றியடையவேண்டுமென்தற்காகவே ரஸ்வி ஆத்திரமூட்டும்விதத்தில்பேசுகிருன் அவனுடைய பேச்சால் ஹிந்துக்கள் ஆத்திரமடைந்து நிதானம் தவறினல் வெள்ளையனுக்கு வெற்றிகிடைத்துவிடும் ”

“ முஸ்லிம்கள் வகுப்புவாதத்தை மறந்துபோகும் விதத்தில் ஹிந்து சகோதரர்கள் நடந்து கொள்ள வேண்டும். வகுப்பு வாதத்தை வகுப்பு வாதத்தால் போக்கமுடியாது. அன்பினலேயே அது சாத்தியம் ”

“ முஸ்லிம்களுக்கு நபிகள் நாயகம், ஸஹாபாக்களின் உபதேசங்களையும், போக்கையும் நினைவூட்டி இஸ்லாம் அன்பினல் பரவியதேயொழிய துவேஷத்தால் அல்லவென்றும் இன்று முஸ்லிம்கள் தங்களுடைய பண்பாட்டை மறந்து முஸ்லிமல்லாதாரைப் போல் நடந்துகொள்ளுகின்றனரென்றும், ஆயினும் முஸ்லிமல்லாதார் ஓரளவுக்கு இஸ்லாமிய ஒழுககத்தை கடைப்பிடித்து நடக்கின்றனரென்றும் கூறினர் ”

பாகிஸ்தானும் சாராயமும்

" அதற்கு பல ஆதாரங்கள் இருக்கின்றன. காங்கிரஸ் மதுவிலக்கு திட்டத்தை நிறைவேற்றி வருகிறது சில முஸ்லிம் சட்டசபை அங்கத்தினர்கள் அதை ஆட்சேபிக்கின்றனர். ஆனல் பாகிஸ்தானில் பாகிஸ்தான் இஸ்லாமிய சாராயமென்று விற்பனை செய்யப்படுகின்றது. காங்கிரஸ் சர்க்கார் இந்தியாவில் முஸ்லிம்களுக்கு அடைக்கலம் அளித்திருக்கிறது பாகிஸ்தானுக்குச் சென்ற முஸ்லிம்களும் திரும்பி வருகின்றனர். ஆனல் பாகிஸ்தானிலிருந்து வெளியேறிய ஹிந்துக்கள் பாகிஸ்தானிலிருந்துவரும் அமைதியின்மையால் பாகிஸ்தான் பெயரையும் சொல்லத் தயாராயில்லை.

அம்பேத்காரும், ஜீதேயும்

" அம்பேத்கார், ஜீதே, மோரே போன்றவர்களும் இந்தியாவுக்கு தீங்கிழைக்கின்றனர். அவர்கள் மகாராஷ்டிரத்தின் பெயரால் காங்கிரஸ் சர்க்காரைப் பலஹீனப்படுத்த பல முறைகளிலும் முயற்சித்து வருகின்றனர்கள் "

" நேர்மையுள்ள பிரஜைகளனைவரும் திரண்டு எழுந்து நாட்டின் நிர்மாணத்தில் பங்கெடுப்பதன் மூலம் பலப்படுத்தி சுபிட்ச இந்தியா ஆசிய ஜோதியாக பிரகாசிக்கச் செய்யவேண்டியது கடமை.

(நமது தேசியக் கடமை — 5-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஆஸாதைக்' கண்டு ஏன் பயப்படுகிறது? என்று விளங்கவில்லை சம்பாதிக்கும் நோக்கங்கொண்டு, மக்களிடையே இன்னும் துஷ்பிரசாரத்தை செய்து கொண்டு, பாகிஸ்தானைப் பற்றியும் ஜின்னாவைப் பற்றியும் பெருமையாகப் பேசிக்கொண்டு சுதந்திர இந்தியாவில் முஸ்லிம் பாமர மக்களை இன்னும் பாதாளத்தில் தள்ள சதிசெய்யும் பத்திரிகைக்கு ஏன் இந்தபீதி? 'குற்றமுள்ள நெஞ்சு குருகுருக்கும்' என்பதற்கேற்ப தாங்கள்செய்யும் குற்றத்தைக் கண்டிக்கும் "ஆஸாதை" க்கண்டு ஏன் இப்படி அஞ்சவேண்டும்.

ஒரு செய்கையைக் கண்டிப்பதாய் இருந்தால் அதைப் பூரணமாய் அறிந்துகொண்டு அதன் பலனை இன்னதென்று தெரிந்துகொண்டு கண்டிக்க வேண்டும். அப்படியில்லாமல், 'தங்களின் சொந்த நலன் ஒரு உண்மையாளியினல் பாதிக்கப்படுகின்றது' என்பதற்காக அதைக் கண்டிப்பவனைப் போன்ற முட்டாள் உலகத்திலேயே இல்லையென்றுதான் சொல்ல வேண்டும்.

"ஆஸாதை" ஒவ்வொருவரும் அவசியம் படித்து பலன் அடையவேண்டுமென்பதுதான் எனது கோரிக்கை. பத்திரிகை பெயரைக் கண்டதும் பயப்படுகிறார்கள். சில லீகர்கள் அதைப்படிப்பது (ஹாராமான) கெட்டகாரியம் என்று கூட நினைக்கிறார்கள். அச்செய்கை-அவர்களின்மேல் குற்றமில்லை மனதிலே ஊன்றிவிட்ட பழைய லீக் மனப்பான்மைதான் காரணம். எப்பொழுது லீகை மறக்கப் போகின்றார்களோ?—எப்பொழுது லீகை குழிதோண்டிப் புதைக்கப் போகிறார்களோ அப்பொழுதுதான் உண்மையை உணர அவர்களால் முடியும்.

இனி லீகினல் இந்திய முஸ்லிம்களுக்குப் பலன் என்ன? ஒன்றுமில்லை. அதை இன்னமும் ஏன் கட்டிக்கொண்டு இருக்கவேண்டும். இன்னும் அந்த கூச்சலைப் போட்டுக்கொண்டு இந்தியாவையும் முஸ்லிம் சமூகத்தையும் பாழ்படுத்திக்கொண்டிருக்க வேண்டாம். லீக்பெயரால் அவர்கள் முஸ்லிம்களுக்கு நன்மை செய்யவும் வேண்டாம். "ஆஸாத்" தைக் கண்டு பயப்படவும் வேண்டாம்.

ஒவ்வொருவரும் "ஆஸாதை" பரப்புவதைக் கடமையாகக் கொள்ளவேண்டும். அது நாட்டுக்கு நன்மையும் தேசத்திற்காகச் செய்யும் பெரியத் தொண்டுமாகும். நமது தேசியக்கடமைகளில் "ஆஸாத்" வளர்ச்சிக்கு உழைப்பதும் ஒன்றாகும்.

ஜெய்ஹிந்த்!

காந்திஜி நிதிக்கு ரூபாய் 1000 நன்கொடை.

சென்னை பிரபல வர்த்தகரான ஹாஜி M. அப்துர் ரஹ்மான் சாஹிப் மஹாத்மா காந்தி ஞாபகார்த்த நிதிக்கு (1000) ஆயிரம் ரூபாய் நன்கொடை அளித்திருப்பதை பாராட்டுகின்றோம். சென்னை மாகாண முஸ்லிம்களுக்கு ஹாஜி சாஹிப் சரியான வழி காட்டியிருக்கிறார். முஸ்லிம்களுக்காக ஆத்ம தியாகம்செய்த உத்தமரின் ஞாபகார்த்த நிதிக்கு சாத்தியமான அளவுக்கு உதவவேண்டியது முஸ்லிம்களின் கடமை. தங்கள் உபகாரியை முஸ்லிம்கள் என்றென்றும் மறக்கக் கூடியவர்களல்ல என்று உலகம்சொல்லும்படி சென்னை மாகாண முஸ்லிம்கள் ஹாஜி M. அப்துர்ரஹ்மான் சாஹிபைப் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

உலகத்தின் யுத்தப் போக்கு

இரண்டாவது மஹாயுத்தம் மூளுவதற்கு ஹிட்லர் தான் பொருப்பு. அதனுல் உலகம் அடைந்த கஷ்ட நஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா கண்டங்கள் யுத்தத்தில் நேர்முகமாகப் பாதிக்கப்பட்டன. அமெரிக்கா ஒரு தரப்பில் கச்சைகட்டி நின்றது. ஆக்ரமிப்பை எதிர்த்த இதர நாடுகள் அதனுடன் சேர்ந்துகொண்டன. அமெரிக்க, பிரிட்டிஷ், ரஷ்ய வல்லரசுகள் ஹிட்லருக்கு எதிராக கைகோர்த்து நின்றன. சமாதானத்தையும் உலக சுதந்திரத்தையும் பாதுகாக்கப் போவதாக நேச நாடுகள் சார்பில் ஓயாமல் பிரசாரம் நடந்துகொண்டிருந்தது. உலக நாடுகளின் சுதந்திரத்துக்கு உத்திரவாதமளிக்க அட்லாண்டிக் சாசனமும் பிரகடனமாயிற்று.

மூன்று வல்லரசுகளும் கூடி நடத்திய மஹாநாடுகள் அநேகம். இனி உலகத்தில் யுத்தம் என்ற பேச்சுக்கும் இடமில்லாமல் செய்யப் போவதாக மஹாநாடு முடிந்த ஒவ்வொரு தடவையும் உலகுக்கு அறிவிக்கப்பட்டது. அதற்காக யுத்தத்துக்கு காரணமாயிருப்பவர்களை யுத்த குற்றவாளிகளைப்போல் தண்டிக்க வேண்டுமென்று சரித்திரத்திலேயே முதன் முதலாக முடிவும் செய்தாயிற்று.

ஜெர்மனி நிபர்தனையற்ற சரணுகதியடைந்து நாஜி தலைவர்கள் தூக்குமேடைகளில் தொங்க விடப்பட்டனர். உலகத்தை நடுங்கவைத்த நாஜி ஜெர்மனியின் சிற்பிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். பிறகு ஜப்பானிய யுத்த குற்றவாளிகளின் படலம் ஆரம்பமாயிற்று.

வருங்காலத் தலைவர்களுக்கு படிப்பினையாக இருக்கவேண்டு மென்பதைத் தவிர நேச நாடுகளின் நடவடிக்கைக்கு வேறு காரணம் இருக்க முடியாது

அத்துடன் எல்லா நாடுகளையும் பொதுவானதொரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து உலக சமாதானத்துக்கும் சுதந்திரத்துக்கும் உத்திரவாதமளிக்க ஐக்கிய நாட்டு ஸ்தாபனமும் உருவாயிற்று. ஆக்ரமிப்பாளர்கள், ஆதிக்க வேட்டைப் பிரியர்கள், யுத்த வெறியர்கள். உலகத்திலிருந்து மறைந்துவிட்டனர். இனி ஆக்ரமிப்பு அபாயமில்லை ஆதிக்க வேட்டையில்லை.யுத்தவெறியில்லை. உலகத்தில் அமைதி நிலவும், சாந்தி ஏற்படும், சமாதானம் நிலைக்கும், பரஸ்பர ஒத்துழைப்பால் உலகம் முன்னேறமுடியும் என்று நம்பி உலகம் நிம்மதியாக மூச்சு வாங்க ஆரம்பித்தது.

அவ்வித நம்பிக்கை அதிக நாள் நிலைத்திருக்கவில்லை. வல்லரசுகளுக்கு ரத்ததிகாரம் (வீடோபவர்) என்ற புனைப்பெயர்பூண்டு ஐக்கியநாட்டு ஸ்தாபனத்துக்குள் ஆதிக்கவேட்டை நுழைவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. ஐக்கியநாட்டு ஸ்தாபனத்தில் ஒவ்வொரு பிரச்னையிலும் ரத்ததிகாரம் வேலை செய்ய ஆரம்பித்ததன்பலனுக உலகம் இன்று இரண்டு கோஷ்டிகளாகப் பிரிந்து கிடக்கின்றது. ரஷ்ய கோஷ்டிக்கும் அமெரிக்க கோஷ்டிக்கு மிடையே மும்முரமாய் பலப் பரீட்சை ஆரம்பமாய் நாளுக்கு நாள் நிலைமை மோசமடைந்துவருகிறது.

கடந்த யுத்தத்தில் ஏற்பட்ட காயங்கள் இன்னும் ஆறவில்லை. அதற்குள் அமைதியின்மையும் கொந்தளிப்பும் ஏற்பட்டது.உலகசமாதானத்தின் காவலாளிகளே யுத்தப்பேச்சு பேசவும் ஆரம்பித்துவிட்டனர்.

உலகப்பூராவிலும் கம்யூனிஸத்தை பரப்புவதற்கு ரஷ்யா முயற்சிப்பதாக அமெரிக்காவும் பிரிட்டனும் குற்றம் சாட்டுகின்றன.

யுத்தம் நடந்துகொண்டிருந்த சமயத்திலும்கூட பிரிட்டன், அமெரிக்காவுக்கு அந்தரங்க சுத்தியோ நல்ல எண்ணமோ இருக்கவில்லையென்றும் ஜெர்மனியையெதிர்த்து நின்று ரஷ்ய பலம் ஒடுங்கட்டு மென்பதற்காக வேண்டுமென்றே பிரிட்டன் அமெரிக்கா யுத்தத்தை நீடிக்கச்செய்தன என்றும் தனியாகவே ரஷ்யா ஜெர்மனியை ஆக்ரமித்துக்கொள்ளும் என்று நிச்சயமாகத் தெரிந்து கொள்ளாதவரை ஹிட்லருக்கு எதிராக இரண்டு நாடுகளும் இரண்டாவது போர் முனையை ஆரம்பிக்கவில்லையென்றும் ரஷ்யா குற்றம் சாட்டுகின்றது.

பரஸ்பர குற்றச்சாட்டுகளும், அவநம்பிக்கையும் மூன்றுவது யுத்தத்துக்கு அடிகோலிவிட்டன. யுத்தம் முடிந்த பிறகு பாதிக்கப்பட்ட நாடுகளின் புனர் நிர்மாணத்தில் கவனம் செலுத்தியிருக்கவேண்டியதவசியம் அதற்கு மாருக யுத்த முஸ்தீபுகளில் வல்லரசுகள் ஈடுபட்டிருக்கின்றன. பரமாணுசக்தியால் உலகத்தை அழிக்க ஆயத்தம் செய்கின்றன. ஸூரிய கிரணங்களிலிருந்து உஷ்ணத்தை கிரகித்து, உலகத்தை பொசுக்குவதற்கு முயற்சிகள் நடக்கின்

றன. உண்மையில் இது வருந்தத்தக்க நிலைமையே யாகும்.

வல்லரசுகளுக்கு அந்தரங்க சுத்தியில்லை. அத னால் உலகத்தின் மிகப்பெரிய நீதிமன்றம் கோஷ்டிப் பிரிவினைக்கு இலக்காகிவிட்டது. யுத்தத்துக்குப் பிறகு உலகம் நிம்மதியிழந்து விட்டது ஐரோப்பா விலும் ஆசியாவிலும் அமைதியின்மை அதிகரித்துவரு கின்றது. பாலஸ்தீனத்தில் அராபியர்களுக்கும் யூதர் களுக்கும் போர் மூண்டுவிட்டது. பாலஸ்தீனப்பிரச் னையில் பாதுகாப்பு கவுன்ஸில் செய்த முடிவு குப் பைக்கூடைக்கு இரையாகிவிட்டது.

யுத்தகாலத்தில் சர்ச்சிலும் ஸ்டாலினும் ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்துகொண்டதை உலகம் ஆச் சரியமடைந்தது. அது ஒரு அதிசயம், என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் இன்று பாலஸ்தீனத்தில் யூதமுதலாளிகளை ரஷ்யர் ஆதரிப்பது அதைவிட பெரிய அதிசயமாகும். 'நாடுகளிடையே ஏற்படும் ஒப்பந்தங் கள், பீரங்கிகளின் வெளிச்சத்தில்தான் வாசிக்கப் படும்.' என்று ஜெர்மனியின் கடைசி அரசர் கைஸர் வில்லியம் அபிப்பிராயம் தெரிவித்தது முற்றி லும் உண்மை.

இன்று சர்வ தேசிய அரசியல் சுய நலத்துக் காக பிரயோஜனப்படுத்திக் கொள்ளப்படுவதை நடை முறைச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. வாயினால் சமாதானமென்று கோஷிக்கும் வல்லரசு கள் கையில் வாளேந்தி நிற்கின்றன.

ஐரோப்பிய யுத்தம் முடிந்து வருஷங்கள் கழிந்து விட்டபோதிலும் இன்றைக்கும் அங்கு யுத்த சூழ் நிலையே இருந்துவருகிறது. ஜெர்மனியின் எதிர்கா லம் வல்லரசுகளிடையே சிக்கலான பிரச்னையாகி விட்டது. ஒருபக்கம் ரஷ்யாவும் இன்னொரு பக்கம் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் தங்களுக்குச் சாதக மான அச்சில் ஜெர்மனியை வார்க்க முயற்சித்துவரு கின்றனர். ஜெர்மனி சம்மந்தப்பட்டவரை பிரச்னை தீர வழி இருப்பதாகத் தெரியவில்லை. மேற்கு ஐரோப் பிய நாடுகளின் யூனியன் ஜெர்மனிக்கு எதிராக அணி வகுத்து நிற்கையில் பிரச்னைக்கு பரிகாரம் காணுவது சாத்தியமில்லை.

இதை ரஷ்யா உணராமலில்லை கிழக்கு ஐரோப் பிய நாடுகளை தன்னுடைய அச்சில்வார்த்து வைத்துக் கொண்டிருக்கிறது. புகைந்து கொண்டிருக்கும் ஐரோப்பிய எரிமலை எந்த நிமிஷத்தில் வெடிக்கும் என்று யாரும் சொல்ல முடியாது ஆசியாவின் அதி லும் குறிப்பாக சைனாவின் நிலைமை அதைவிட மோச மாக இருந்து வருகிறது. சைனாவுக்குப் பிடித்த து திர்ஷ்டம் கடந்த பன்னிரெண்டு வருஷங்களாகவும் விட்டபாடில்லை. ஜப்பானுடனிருந்த சண்டைதீர்ந்த வுடன் உள் நாட்டு சண்டையின் அழிவு ஆரம்பமா யிற்று. உள்நாட்டு சண்டை என்று சொல்லுவதை விட ரஷ்ய அமெரிக்க போராட்டம் என்று சொல்லு வது மிகவும் பொருந்தும். சீன தேசிய சர்க்காருக்கு அமெரிக்காவும் கம்யூனிஸ்டுகளுக்கு ரஷ்யாவும் உதவி செய்கின்றன.

சீன சர்க்காருக்கு அமெரிக்க உதவி கிடைப் பதைவிட சீன கம்யூனிஸ்டுகளுக்கு ரஷ்ய உதவி சுலப மாககிடைப்பதுசாத்தியம். கம்யூனிஸ்டுகள் நாளுக்கு நாள் பலமடைந்துவருகின்றனர். உலகத்தில் நாலில் ஒரு பங்கு மக்களை கம்யூனிஸ வளையத்துக்குள்கொண் டுவர ரஷ்யா முயற்சிக்கின்றது. அதைத் தடுக்க அமெரிக்க சைனாவால் டாலர் மழை பொழிகின்றது. இன்றைய நிலைமையைப்பார்த்தால் சைனாவில் அமெ ரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் நடுவே இருந்து வரும் திரை சீக்கிரமே கிழிந்துவிடுமென்று சொல்லலாம் கொரியாவில் அமெரிக்கா ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள விரும்புவதற்கு ரஷ்யா இணங்கத் தயா ராயில்லை. ஆகையால் செய்கையளவில் மோதல் ஆரம்பமாய்விட்டது.

இன்றைய உலகத்தின் நிலைமை இதுதான். பழய சாஸனங்களை பரணிமீது தூக்கி யெறிந்தாயிற்று. சமாதானம், அமைதி, சாந்தியின் உறுதி மொழிகள் பழைய கதைகளாகிவிட்டன. அமெரிக்க ஜனதிபதி ரஷ்யாவை எதிர்க்க ராணுவ ஆள்சேமிப்பை பிரகட னம் செய்துவிட்டார். ரஷ்யா யுத்த முஸ்தீபுகளில் ஈடுபட்டிருக்கிறது. இருதரப்பிலும் தீவிர முன்னேற் பாடுகள் நடந்துவருகின்றன.

அமெரிக்கா ஐரோப்பிய யுத்தத்தில் ஈடுபட்டதை உலக சமாதான தூதர் மஹாத்மா காந்தி ஆட்சே பித்தார். "இன்று உலக அழிவு நிச்சயமாய்விட் டது. மூன்றுவது ஆசாமியாக இருந்து மனிதவர்க் கம் கொலையுறுவதிலிருந்து தடுக்க அமெரிக்கா தன் னுடைய சக்தியை உபயோகிக்கும், என்ற நம்பிக் கையிருந்துவந்தது. அதுவும் இன்று யுத்தத்தில் ஈடு பட்டுவிட்டது." என்று காந்திஜீ வருந்தினர். இன்று உலகத்தில் ரத்தம் சிந்தப்படுவதைத்தடுக்க சக்தியுள்ள ஒருவரையும் காணோம். உலக மரியாதைக்குபாத்திர மாய் காந்திஜீ இருந்தார். அவர் உயிருடன் இருந் திருந்தால் அமெரிக்கா பிரிட்டன் முதலிய இதர யுத்த வெறிபிடித்த நாடுகளுக்கு சமாதானவழியைக் காட்டியிருக்க முடியும். ஆனல் சமாதானத்தின் சுடர்விளக்கை ஒரு வெறியனுடைய கைகள் அணைத்து

தண்டனைக்குப் பிறகு விசாரணை!

சிந்து பிரதமரான மிஸ்டர் முஹம்மத் அய்யூப் குர்ரோ பதவியிலிருந்து நீக்கப்பட்டதைக் குறித்து பொறுப்பு வாய்ந்த பத்திரிகையான 'ஜமீன்தார்' கீழ்வரும் தலையங்கம் எழுதியிருக்கிறது

"குற்றச்சாட்டை மறுக்க சந்தர்ப்பம் அளிக்கப்படாமலேயே மிஸ்டர் குர்ரோ பதவியிலிருந்து எவ்விதம் நீக்கப்பட்டார் என்று புரிந்துகொள்ளக்கூடவில்லை. பஸல் இலாஹி, மிஸ்டர் அல்லா பக்ஷ், ஷவுகத் ஹயாத்கான் நீக்கப்பட்டதைபபோல் ஆங்கிலேயர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதாகும். ஆங்கில ஆட்சியில் அடிமைத்தனம் இருந்து வந்தது. இன்று சுதந்திரம் ஜனநாயகம், பொதுஜன ஆட்சி இருந்து வருகிறது. விழிப்படைந்துள்ள இக்காலத்திலும் இருட்டடிப்பு என்றால் சுதந்திரத்துக்கும் அடிமைத்தனத்துக்கும் அர்த்தம் ஒன்றே; வார்த்தையளவில்தான் வித்தியாசம் என்று சொல்லவேண்டியிருக்கும்.

மிஸ்டர் குர்ரோவை சட்டபூர்வமாக விசாரிக்கப்படுமென்றும் அதற்காக ட்ரிபியூனலும் அமைக்கப்படுகிறதென்றும் பாகிஸ்தான் சர்க்கார் அறிக்கை வெளியிட்டிருப்பதுதான் விசித்திரம் குற்றவாளியை தூக்கிலிட்டுவிட்டு அவன் கொலைக்குற்றம் செய்தானா இல்லையா என்று விசாரணை நடத்தினர் எப்படியோ அப்படித்தான் இதுவும். குர்ரோ மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றம் விசாரிக்கப்படவேண்டிய வேலை பாக்கியிருக்கும்போதே அதற்குள் அவருக்கு தண்டனை ஏன் கொடுக்கப்பட்டது? தண்டிக்கப்பட்டபிறகு விசாரணை நடத்துவதென்பது பிணத்தை அடக்கம் செய்த பிறகு குளிப்பாட்டி கபன் கொடுப்பது போலாகும். குர்ரோ பதவியிலிருந்து நீக்கப்படு முன் ட்ரிபியூனல் அமைந்திருக்கவேண்டும் அப்பொழுது சட்டம் நியாயத்துக்கு உட்பட்டு மிஸ்டர் குர்ரோ பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டியவரா இல்லையா என்று விசாரித்தறிவது சாத்தியமாக இருந்திருக்கும் மேலும் மிஸ்டர் குர்ரோ கவர்னரின் உத்திரவால் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார். கவர்னராயிருக்கும் குலாம் ஹுசைன் ஹிதயததுல்லாவுக்கும் மிஸ்டர் குர்ரோவுக்குமிடையே நீண்ட நாட்களாக மனக்கசப்பு இருந்துவருவது உலகுக்குத் தெரியும். புதிய மந்திரிசபை அமையும்போது இருவருடைய மனக்கசப்பும் சண்டையின் அளவுக்குக்கூட முற்றிவிட்டது. குலாம் ஹுசைன் பிரதம மந்திரி ஆக விரும்பினர். முஸ்லிம் லீக் மிஸ்டர் குர்ரோவை ஆதரித்தது. காய்தே ஆஜம் உடைய கிருபா கடாட்சம் ஹிதாயதுல்லா மீது இருந்துவந்ததுதான் எல்லாவற்றையும்விட பெரிய தொல்லையாக இருந்தது. குலாம் ஹுஸைனும் ஒரு தலைவராக இருந்து வருவதற்கு காய்தே ஆஜமுடைய தவறான கடாட்சமே காரணம். இல்லையேல் சிந்து அஸெம்பிளியில் அல்லா பக்ஷ் மந்திரி சபைக்கு எதிராக கண்டனத் தீர்மானம் பிரேரேபிக்கச்சென்று சட்டசபைக்குள் நுழைந்தவுடன் சர்க்கார் பெஞ்சுகளில் போய் உட்கார்ந்துவிட்ட புண்ணியவான்தான் குலாம் ஹுஸைன் ஹிதாயத்துல்லா. மிஸ்டர் அல்லா பக்ஷ் மந்திரிசபையின் ஆசை காட்டிவிட்டதே குலாம் ஹுஸைனின் திடீர் மாறுதலுக்கு காரணம் இருந்தாலும் சிந்து கவர்னராயிருப்பதுடன் காய்தே ஆஜமுடைய கடாட்சத்திற்குப் பாத்திரமாய் பிரகாசிக்கிறார். காய்தே ஆஜம் குலாம் ஹுஸைனை கட்சித்தலைவராக்க விரும்பினர். ஆயினும் கட்சி அந்த சுமையை சுமக்கத் தயாராயிருக்கவில்லை. இந்தத் தோல்வி சிந்து கவர்னர் பதவியால் அகற்றப்பட்டது அவர் சிந்துவாசி சிந்துவில் அவருடைய உறவினர்களும், விரோதிகளும் இருக்கின்றனர் என்று தெரிந்திருந்தும் காய்தே ஆஜமின் கடாட்சத்திற்கு உரிமை உள்ளவர் என்பதற்காக கவர்னராக்கப்பட்டார். எது எப்படியிருப்பினும் அவரை கவர்னராக்கி குர்ரோ தலைமீது சுமத்தியாயிற்று. அன்பரின் கடைக்கண் பார்வையிருக்க தன்னுடைய அதிர்ஷ்டத்தைக் குறித்து அவர் பெருமைப்படுவதில் தவறென்ன?

விட்டன. அடுத்த படியாக ரோமாபுரி போய் இருக்கின்றார். கிட்டத்தட்ட பாதி உலகத்தின் ஆத்மீக வழிகாட்டியாக விளங்குகிறார் இருப்பினும் அவருடைய பேச்சைக் கேட்பார் யாருமில்லையென்பதை சம்பவங்கள் நிரூபித்துக்காட்டிவிட்டன. அவருடைய கண்களுக்கெதிரே ஐரோப்பிய கிருஸ்துவ தேசங்கள் யுத்தத்தில் குதித்தன அவநம்பிக்கை அதிகரித்துவரும் இச்சமயத்தில் இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு முயற்சிசெய்தால் ஒருக்கால் உலகம் அழிவினின்றும் தப்ப முடியும் என்று நம்ப இடமிருக்கின்றது. அமெரிக்கருக்கு பண்டிதநேரு ஒலிபரப்பிய செய்தி யுத்தத்திற்கு எதிராக விடுக்கப்படும் எச்சரிக்கையாகவே இருந்தது குறிப்பாக எந்த ஒரு கோஷ்டியிலும் சேர மறுத்துவிட்டதைக் குறித்து பண்டித நேருவை உலகம் கௌரவிக்கின்றது யுத்தத்தைத் தவிர்த்து விஞ்ஞான முன்னேற்றத்தை நிர்மாணத்துறையில் ஈடுபடுத்த வேண்டுமென்பதே நேருஜீயின் விருப்பம்.

பண்டித நேருவின் முயற்சிகள் வெற்றியடையுமா இல்லையா என்பதை காலப்போக்குதான் முடிவு செய்யக்கூடும். நிலைமையே மோசமடைந்துவிட்டது. இரண்டுவிதக் கொள்கைகள், இரண்டுவித நோக்கங்கள் ஒன்றோடொன்று மோதத் தயாராய் இருக்கின்றன. ஜனநாயகமும் கம்யூனிஸமும் சேர்ந்து பாஸிஸத்தை முறியடித்தாயிற்று. இன்று இரண்டு வாள்கள் இருக்கின்றன. உறை ஒன்றுதான் உலகம் ஒன்று முரண்பட்ட கொள்கைகள் இரண்டு முடிவு என்னவாயிருக்கும் என்பதுதான் தெரியவில்லை.

சிறு கதை

பேயுலகம்.

(தி ரா. ஸ்ரீனிவாஸன்.)

நல்ல இருட்டு நாட்களில்கூட இரவு வெகு நேரம் கழித்துத்தான் மருதூரிலுள்ள என் வீட்டிற்கு காரியாலயத்திலிருந்து திரும்புவேன் வயிற்றுப்பிழைப்பை முன்னிட்டு மருதூரில் வசித்து வந்த நான், வேதாலையிலுள்ள எனது காரியாலயத்திற்கு தினமும் காலை பத்து மணிக்குச் சென்று, இரவு வெகுநேரம் கழித்து திரும்புவது வழக்கம் இது எனக்கு நாளடைவில் சர்வ சகஜமாய்ப் போய்விட்டது

வேதாலையில் வசிப்பதற்கு சௌகரியமான வீடு கிடைக்காததினால், நான் மருதூரில் வசிக்கும்படி நேரிட்டது. இந்த இரண்டு ஊர்களுக்கும் இடையிலுள்ள மூன்று மைல்கள் தூரத்தை நடந்து சென்றே என் காரியங்களைச் செய்து வந்தேன். மதவெறி காரணமாக திடுக்கிடும் சமாச்சாரங்களைக் கேட்டு வந்த எனக்கு, காரியாலயத்திலிருந்து இருட்டு நாட்களில் திரும்பி வரும்பொழுது வெகுநாட்களாகவே என்னையுமறியாமல் உள்ளத்தில் ஒருவித அச்சம் ஏற்படும்.

ஆனால் பேய் பிசாசு எனபயந்து ஜனங்கள் கூறும் வதந்திகளை நான் நம்புவது கிடையாது அவற்றில் எனக்கு நம்பிக்கையும் கிடையாது அதனால் அதற்காக பயப்படுவது மில்லை

வழக்கம்போல் அன்றும் அலுவல்களைமுடித்துக் கொண்டு காரியாலயத்தை பூட்டிவிட்டு வீட்டை நோக்கி நடக்கலானேன். அப்பொழுது மணி ஒன்பது தானிருக்கும் தினமும் என்னுடன் சிறிது தூரம் பேசிக்கொண்டே வந்துவிட்டு திரும்பிச் செல்லும் உள்ளூர் நண்பர் ஒருவர், அன்றும் கூட வந்தார்.

“என்ன சார்! நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கவே மாட்டேனென்கிறீர்கள்! இந்த இராக் காலங்களில் தாங்கள் எதற்கு இப்படி தனி வழி நடக்கிறீர்கள்? அலுவல்களை ‘சிறிது முன்னேரத்திலேயே முடித்துக்கொண்டு வீடு திரும்பக்கூடாதா?” என்று அன்புடன் கடிந்துகொண்டார் நண்பர்.

அப்பொழுது நாங்கள் வேதாலையிலிருந்து மருதூருக்குச் செல்லும் ஒரு குறுகியப் பாதையில் வந்துகொண்டிருந்தோம். அப்பாதைதான் அவ்விரண்டு ஊர்களையும் இணைத்து, அங்குள்ள குடிகளின் ‘ராஜபாட்டையாக விளங்கியது! இரண்டு பக்கங்களிலும் வெகு அடர்த்தியாக வளர்ந்திருந்த மரங்கள், பாதையின் தோற்றத்தை மிகவும் பயங்கரப்படுத்தின. அக்காட்சியானது, ஒரு நீண்ட மலையில் குடையப்பட்ட ஒரு சிறிய கணவாயை ஞாபகமூட்டியது

“எனக்கென்ன சார்! பயம். நான்தான் தினம் இவ்விதம் போய்க்கொண்டிருக்கிறேனே!” என்றேன்.

“அது சரிதான் இருந்தாலும் தாங்கள் இவ்விதம் செய்வது உசிதமில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. மேலும் தாங்கள் வெளியூர் வாசியானதால் இப்பாதையிலுள்ள கெடுதல்களை அறியாமல் அவ்விதம் செய்கிறீர்” என்று தயக்கத்துடன் கூறினார் நண்பர்.

நண்பர் மேலே கூறாமல் தயக்கத்துடன் நிறுத்தியது என் ஆவலை அதிகரிக்கச் செய்தது.

“அப்படியென்றால் இப்பாதையில் நடப்பது தவறு என்கிறீர்கள்? ஏன் அதற்குக் காரணம்?”

“இப்பொழுது ஏன் சார் இந்த இருட்டு வேளையில் அதைக் கேட்கிறீர்கள்?”

“சும்மா சொல்லுங்கள் மிஸ்டர் மணி! நான் ஒன்றும் பயப்படமாட்டேன்” என்று தொந்திரவு செய்தேன்.

“நான் ஒன்றையும் கண்ணால் கண்டதில்லை! ஆனால் இப்பக்கத்து ஜனங்கள் யாவரும் கூறுகிறார்கள் நீங்கள் செல்லும் இப்பாதையின் நடுவில் ஒரு பாலம் இருக்கிறதல்லவா! அதன் அருகில் ஒரு முனி வசிக்கிறதாம். இரவு வேளைகளில் அவ்வழியாகச் செல்லுகிறவர்களை அது பயமுறுத்தி துன்புறுத்துகிறதாம். அதற்குத்தான் உங்களையும் செல்லவேண்டாம் என்கிறேன்.” என்றார். அவருக்கு பேய் என்பதில் அபார நம்பிக்கை உண்டு என்பதை பேசும்பொழுது அவர் முகம் எடுத்துக்காட்டியது.!

நண்பர் கொள்கையிலிருந்து இவ்விஷயமாக முற்றிலும் மாறுபட்ட எனக்கு இது ஆச்சரியத்தை உண்டாக்கியது.

“மிஸ்டர் மணி! இதற்காகத்தானா இவ்வளவு பயப்படுகிறீர்கள். நான் தைரியமாகப் போய் வருகிறேன் நீங்கள் பயப்படாதீர்கள்” என்று கூறி பிரிந்தேன்.

நண்பர் சிறிது மனத்தாங்கலுடனேயே பிரிந்து சென்றார்.

வீட்டை நோக்கி நடக்கவாரம்பித்தேன் நண்பர் கூறிய முனியின் வரலாறு அடிக்கடி மனதில் தோன்றி ஊசலாடியது! கண்ணுக்கெட்டிய தூரம் நீண்ட வெறிச்சென்ற பாதையை நோக்கும்பொழுது என்னையறியாமலேயே ஒருவித பயம் என்னைப் பிடித்து உலுக்கியது! தைரியத்தை இழக்காமல் நடக்கலானேன்.

பாதிதூரம் வந்து விட்டேன். பாலத்திற்கு வர இன்னும் ஒரு பர்லாங்குதான் இருக்கிறது நண்பர் கூறிய 'முனி' என்னை 'வெட வெட' யென்று நடுங்கச் செய்து விட்டது! கால்கள் உணர்ச்சியின்றி ஊர்ந்து கொண்டிருந்தன. இதுவரையில் நினைக்காத தெய்வங்களை எல்லாம் வேண்டித் தொழுதது என் உள்ளம்!

அதோ! ஒரு கருத்த உருவம் என்னை நோக்கி வருகிறது!

என்தலை சுழன்றது. வயிற்றின் அடியில் அக்கினியை வைத்துக்கட்டினால் போலிருந்தது. வெட வெட வென்று நடுங்கிக்கொண்டே நின்றுவிட்டேன்!

என்ன ஆச்சரியம்! என்னைக்கண்ட அவ்வுருவம் 'தடால்' என கீழேவிழுந்துவிட்டது! வாய்ஏதோ முணுமுணுத்தது.

சிறிது நேரம்கழித்து என் உணர்ச்சிபெற்றேன். அவ்வுருவத்தின் அருகில்சென்று கவனித்தேன்.

"என்சாமி முனியப்பா! என்னைக்காரு! என் குலதெய்வமே! உனக்கு பானைக்கள்ளும், குண்டுக் கடாவும் வெட்டிப்படைக்கிறேன்!"

வயதான கிழவன் ஒருவன், கண்களை இறுக மூடிக்கொண்டு இவ்வாறு முனகிக்கொண்டிருந்தான் எனக்கு விஷயம் ஒருவாறு விளங்கிவிட்டது.

"ஏய் கிழவா! நான் பேய் இல்லையப்பா! நானும் உன்னைப்போல் ஒரு மனிதன்தான்! எழுந்திரு, பயப்படாதே" என்றுகூறி அவனை தூக்கி உட்கார்த்தினேன்.

கிழவனின் உடல் நடுங்கிங் கொண்டிருந்தது!

'முனியப்பா! என்னை இத்துடன் விட்டுவிடு, உனக்கு படைக்கவேண்டியதை ஒன்றும் குறைக்காமல் வரும் வெள்ளிக்கிழமை செய்குறேன்! என்னை விட்டுவிட்டு மறைந்துபோ, என்சாமி!" என்று என் காலில் விழுந்து அலறினான்.

நான் எவ்வளவு சொல்லியும், என்னை "மனிதன்" என்று அவன் நம்ப மறுத்து விட்டான்! கடைசியில் வேறுவழியின்றி அவனை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு, நான் மேலே நடக்கவாரம்பித்தேன்.

அன்றிரவு தூங்கும்வரையில், இச்சம்பவமானது என் மனதில் தோன்றி அடிக்கடி என்னை ஆச்சரியத்தில் மூழ்கும்படி செய்தது.

மறுநாள் காலை, நான் வழக்கம்போல் காரியாலயத்திற்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன் அப்பொழுது திடீரென ஒரு பெருத்த சப்தம் தெருக்கோடியில் கேட்டது. அவசரமாக வெளியேவந்து, சப்தம்வந்த திக்கைகவனித்தேன் தூரத்தில் ஒருபெருத்தகூட்டம் நின்றுகொண்டு, ஏதோ சப்தத்தை யுண்டாக்கிக் கொண்டிருந்தது. ஏதாவது "கொலை" தான்விழுந்துவிட்டதோ என்று அறிந்துகொள்ளும் ஆவலில் கூட்டமிருந்த இடத்திற்கு வேகமாக நடக்கலானேன்!

தன் சொந்தப்பொருள் ஏதாவதைபறிகொடுத்து, வருந்துபவன், தன்னைநோக்கி வரும் ஒவ்வொருவரிடமும், தன் விதியின் கொடுமையைச் சொல்லி அழுவதுபோல், என்னைக்கண்டவுடன் வேகமாக, என்னிடம்வந்து ஆத்திரமாகப் பேசவாரம்பித்தான் குப்பன். அவன்தான் மருதூரின் "வம்பர்கள் சபை" யின் தலைவன்!

என்ன, அண்ணே! இந்த "பாலத்துமுனி" யின் அட்டகாசம் இப்பல்லாம் ரொம்பவும் சாஸ்தியாப்போய்விட்டது. ஒன்றுமில்லே, நேற்று நம்ம சுப்புப் பிள்ளை இல்லே, அவரு இங்கேயிருந்து வேதாளைக்குப் போயிகிட்டு இருந்தாரு! அப்போ அந்த முனி அவரு முன்னேதோன்றி அவரை பயமுறுத்திச்சாம். அவரு "உனக்கு பானைக்கள்ளும், குண்டுக் கடாவும் வெட்டி படைக்கிறேன்" என்று வேண்டிக் கொண்டபிறகு, அது மறைந்து போச்சாம்! இந்த அநியாயத்தை என்னென்று சொல்லறது! அதுக்கு ஒருவழி செய்யத்தான் இப்போ பேசிகிட்டு யிருக்கோம். நீங்க என்ன சொல்லறீங்க?............"

"அட! அது 'பேய்' இல்லையப்பா! நான்தான் வந்துகொண்டிருந்தேன் என்னைக் கண்டுதான் அக்கிழவன் பயந்துவிட்டான்!" எனசொல்ல வாயெடுத்தேன்.

குப்பன் சொன்னவேகத்தையும், அவனை ஆதரித்து அங்கே கூடியிருந்த மற்றவர்களின் முகத்தையும் நோக்கிய நான் என்சொல் அம்பலம் ஏறாது என கண்டுகொண்டேன்!

"சரிதான், இருக்கும்! நல்லாயோசிச்சு அதுக்கு ஒரு முடிவுகட்டுங்க! நான் வேலைக்கு போகணும், பிறகு வாரேன்!" என்றுகூறி கூட்டத்தை விட்டு அகன்றேன்.

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E Kadalangudi St, Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.